விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 290 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 18 வியாழக்கிழமை (05.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### பேரினவாத அடக்குமுறைக்கு எதிராக
# யாழில் நேற்று மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)
முல்லை நீதிபதிக்கு நீதி கோரியும் பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிராகவும் யாழில் நேற்று மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
(16ஆம் பக்கம் பார்க்க)

### ஜனவரி 4 – 31ஆம் திகதி வரை
## உயர்தரப் பரீட்சை

(கொழும்பு)
2023ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையை ஜனவரி 04ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.
திருத்தப்பட்ட பரீட்சை நேர அட்டவணை எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.
பரீட்சைக்கு விண்ணப்பிக்க எதிர்பார்த் 15

### லிட்ரோ, லாப்ஸ்
## எரிவாயு விலைகள் நேற்று முதல் அதிகரிப்பு

(கொழும்பு)
லிட்ரோ, லாப்ஸ் சமையல் எரிவாயு விலைகள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.
அதன்படி லிட்ரோ 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் 343 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி புதிய விலை 3470 ரூபாய் ஆகும்.
5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 137 ரூபாயால் அதிகரிக்கப்பட 15

### போக்குவரத்தை சீர்செய்யாது
## யாழில் போராட்டக்காரர்களை படம் எடுத்த பொலிஸார்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் உள்ளிட்டவர்களை பொலிஸார் தமது கையடக்க தொலைபேசிகளில் புகைப்படம் மற்றும் காணொளிகளை எடுத்தனர். 15

## நீதி தேவதையிடம் மண்டியிட்டு கோரிய போராட்டக்காரர்கள்


15

## சிறுபான்மையின நீதிபதிகளை பெரும்பான்மையினர் அடக்குகின்றனர்
### மனித சங்கிலிப் போராட்டத்தில் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
தம் இனம் சார்ந்த தீர்ப்புக்களை வழங்கமுடியாமல் போய்விடும் என்பதற்காகவே சிறுபான்மையின நீதிபதியினை மத்திய பெரும்பான்மையினர் அடக்குகின்றனர் என தமிழ் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வட மாகாண முதலமைச்சரும் ஓய்வுபெற்ற 15

## 21 வருடங்களுக்குப் பின் இலங்கைக்கு தங்கம்



15

## நான் கூறியது எப்படி அச்சுறுத்தலாகும்?
### சபையில் வீரசேகர கேள்வி



(கொழும்பு)
குருந்தூர் பொங்கலுக்கு அனுமதி தந்தால் தேவையற்ற பிரச்சினை உருவாகும் என தெரிவித்திருந்தேன். இது எப்படி அச்சுறுத்தலாகும்.
முல்லைத்தீவு நீதிபதிக்கு நான் அச்சுறுத்தல் விடுத்திருந் 16

## முல்லைத்தீவு சட்டத்தரணிகளின் புறக்கணிப்பு தொடர்கின்றது

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா அவர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் ஆரம்பித்த காலவரையறையின்றிய தொடர் நீதிமன்ற 15

### முல்லை நீதிபதி பதவி விலகல்
## நீதிச் சேவை ஆணைக்குழு விசாரணையை ஆரம்பித்தது

(கொழும்பு)
முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.
இதற்காக விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
சம்பவம் தொடர்பில் இலங்கை பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழு தெரி 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரழிவின் விழிம்பில் இலங்கை தமிழர்களின் வாழ்வு கேள்விக்குறி

## பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் இரா.சம்பந்தன்



(கொழும்பு)

பிரித்தானியர்களின் ஆட்சிப் பாணியால் இலங்கை பேரழிவின் விளிம்பில் நிற்கின்றது இதனால் தமிழர்களின் வாழ்வு கேள்விக்குறியாகியுள்ளது என பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் இரா.சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் இலங்கைக்கான புதிய பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அண்ட்ரூ பற்றிக்குக்கு இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போதே இரா.சம்பந்தன் இதனை தெரிவித்தார்.

"பிரித்தானிய ஆட்சி இலங்கையிலிருந்து வெளியேறிய போது, பிரித்தானிய ஆட்சி முறையை இங்கும் கையளித்து விட்டுச் சென்றுவிட்டனர்.

அதன்பின்னர் பிரித்தானிய ஆட்சி தங்களது முறைமையை சீர்படுத்திக்கொண்டது.

தொடர்ந்து ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து, வேல்ஸ் போன்ற நாடுகளுக்கும் தாராளமாக அதிகாரப் பகிர்வை வழங்கி, சீரான உச்ச ஆட்சி முறைமையை உருவாக்கி, குடிமக்களின் நெறிமுறையான வாழ்வை பிரித்தானியா உறுதிப்படுத்தியுள்ளது.

ஆனால், பிரித்தானியர்கள் விட்டுச்சென்ற ஆட்சிப் பாணியைக் கைவிட்டு அதனை மறுசீரமைத்துக்கொள்ள இலங்கை அரசு மறுக்கிறது. இதன்மூலம் இலங்கை பேரழிவின் விழிம்பில் நிற்கின்றது. இந்த ஆட்சி முறைமையே மேலும் தொடருமானால் இங்கு ஒரு மக்கள் குழுமமாக தமிழர்கள் வாழ்வதென்பது சாத்தியப்பாடற்ற விடயமாக மாறிவிடும்" என இரா.சம்பந்தன், பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் சுட்டிக்காட்டினார். (ம-7)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையத்தின் தலைவர் மொஹமட் உவைஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் நேற்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

14 மாதங்களுக்கு முன்னர் மிகவும் சவாலான காலகட்டத்தில் பதவியை ஏற்ற தனது அர்ப்பணிப்பு மற்றும் சேவைக்கு நன்றி தெரிவிப்பதாக அமைச்சர் தனது உத்தியோகபூர்வ X தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாகவும் அமைச்சர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்சுடன் விமானப்படை ஒப்பந்தம்

இலங்கை விமானப்படை மற்றும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று (MOU) கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மற்றும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் நிறுவனத்தின் தலைவர் அசோக் பத்திரகே ஆகியோர் முன்னிலையில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் விமானப்படை தலைமையகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இந்நிகழ்வில் விமானப்படை முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் அழைப்பாளர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

விமானப் பயிற்சி, கல்வி மற்றும் பரஸ்பர ஆர்வமுள்ள துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)


# Invitation for Bids (IFB)

## KARACHCHI PRADESHIYA SABHA, KILLINOCHCHI DISTRICT

[1]. The Chairman Divisional Procurement Committee (LAPC), on behalf of Karachchi Pradeshiya

Sabha, now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No | Bid No. | Name of the Bid | Estimated Civil Cost With Out VAT (Rs.Mn) | ICTAD Grade Required | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bond Amount (Rs.) | Validity Period | |
| 01 | **NP/KN/KPS/ 2023/PSDG-2** | **Construction of Cemetery hall & renovation of access road at Barathipuram** | 2.8 | C9,C8 & C7 (Building Construction) | 28,000 | 30.01.2024 | 77 days |

[2]. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure. And Public Finance Circulars No 03/2020 (i) and 04/2016 dated 11.01.2021 and 18.02.2021 respectively will be adopted.

[3]. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

[4]. Qualification requirements are indicated in Section 5 Schedule of the Bidding document.

[5]. Interested bidders may obtain further information from **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi,** (T.P No: 0212285761, Fax No: 0212285690) and inspect the bidding documents at the address given below from 05th October 2023 until 18th October 2023 during 09:00 Hrs to 16:00Hrs on normal working days

[6]. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** from **05th October 2023** until from **18th October 2023** during **09:00**Hrs to **15:00**Hrs on normal working days upon payment of a nonrefundable fee of **Two Thousand Rupees (Rs.2,000.00)**. The method of payment will be by cash.

[7]. Bid shall be delivered in duplicate to the address below at **Chairman, Procurement Committee, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi** on or before **14.00**Hrs **on 18th October 2023** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend

[8]. Bid shall be valid up to **02nd January 2024**. All bids shall be accompanied by a "Bid-Security, as mention in the table above.

[9]. A pre-bid meeting will be held at 11.00 Hrs on **10th October 2023 at Karachchi Pradeshiya Sabha,A9 Road, Kilinochchi.**

**Chairman,**
Procurement Committee,
Karachchi Pradeshiya Sabha,
A9 Road,
Kilinochchi.

(C-7378) 05.10.2023


# முறையிட முடியாதவாறு நீதிபதிக்கு அச்சுறுத்தல்

## சபையில் சார்ள்ஸ் நிர்மலநாதன்

இலங்கையில் உள்ள ஒரு நீதிபதி தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது என்று முறையிட முடியாதவாறு மேல்மட்டங்கள் இருக்கின்றன என பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தான் முறையீடு செய்தாலும், அதற்குரிய பாதுகாப்போ அல்லது நடவடிக்கைகளோ மேல் மட்டத்தினால் எடுக்கப்படாது என்ற ஒரு செய்தியையே நீதிபதி சரவணராஜா மறைமுகமாகச் சொல்லியிருக்கின்றார்.

அந்த அடிப்படையில் தான் நீதிபதி சரவணராஜா இங்கிருந்து வெளியேறியிருக்கின்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சாதாரண மக்களைப் பொறுத்தவரையிலும் இதேபோன்ற பிரச்சினைகள் தான் உள்ளன என்றும் சுட்டிக்காட்டினார். (ம-7)

# பாம்பு தீண்டி சிறுவன் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தோட்டவாடியில் பாம்பு தீண்டியதால் 12 வயது சிறுவனொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

குறித்த சிறுவன் நேற்று முன்தினம் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த வேளையில் பாம்பினால் தீண்டப்பட்டுள்ளார்.

இதற்கமைய மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேலும் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது, மாணவனின் வலது காலின் மேல் பாகத்தில் பாம்பு தீண்டியதால் குருதியோட்டத்தில் நஞ்சு கலந்து இதயம் செயலிழந்து உயிரிழந்து இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. (ம-7)


# என்றும் மறவோம்!

அமரர் கந்தசாமி கிருஷ்ணமூர்த்தி

(CTB - அய்புத்துரை)



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்ப உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!
அன்னாரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ விசுவத்தனை முருகப்பெருமானையும், ஸ்ரீ ஆதி முத்துமாரியம்பாளையும் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை
மூளாய் வல்லிபுரம் குடும்பத்தின் சார்பில்

தோற்றம் 23.02.1946 மறைவு 04.10.2023

தங்க.முகுந்தன், த.சுகந்தன், த.அகிலன்
077 727 9238 (C-7380)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் இடம்பெற்ற மனித சங்கிலிப் போராட்டம்













**முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிரான மனிதச்சங்கிலிப் போராட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.**

படங்கள் -சிவசாந்தன், கஜிந்தன்.

## நீதிபதியே நாட்டைவிட்டு ஓடுகிறாரெனில் சாதாரண மக்களின் நிலை...?

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கேள்வி



(கொழும்பு)

இந்த ஆட்சியில் நீதியை எதிர்பார்க்க முடியாது என்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பதவி விலகல் விவகாரம் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இப் படியான ஆட்சியில் நல்லிணக்கம் எப்படிச் சாத்தியமாகும்? என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐ.நா வரை சென்று நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்றார்.

ஆனால், இங்கு நீதிபதி ஒருவர் அழுத்தங்கள் மற்றும் உயிர்அச்சுறுத்தலால் பணி புரிய முடியாது என்று தெரிவித்துவிட்டு பதவி விலகியுள்ளார். இறுதியில் அவர் நாட்டை விட்டும் வெளியேறியுள்ளார்.

பதவி விலகிய நீதிபதி தெரிவித்த விடயங்களுக்கு அரச உயர்பீடம் உடனே மறுப்புக் கருத்துக்களைத் தெரிவிக்காமல் உண்மையில் என்ன நடந்தது என்பது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்.

நீதிபதி ஒருவரே பதவி விலகி உயிரைக் காப்பாற்ற நாட்டை விட்டு ஓடுகின்றார் எனில் சாதாரண பொதுமக்களின் நிலை என்ன? ஜனாதிபதி இந்த விடயத்தில் அதிக கரிசனை செலுத்த வேண்டும் எனவும் தெரி வித்தார். (நி-5)

## சீரற்ற காலநிலையால் 30,000 இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

(கொழும்பு)

“நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 12 மாவட்டங்களைச் சேர்ந்த 30,000 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்” என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டமே மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளது. (நி-5)

## மரண அறிவித்தல்

### திருமதி. நகுலாம்பிகை வாமதேவன்



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நகுலாம்பிகை வாமதேவன் அவர்கள் கடந்த (02.10.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-இலட்சுமிபிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி-நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும் வாமதேவன் (பத்திரிகையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் வசீகரன், சுஜீத்தா, தர்மிஷா ஆகியோரின் அன்புத் தாயாரும் சகிலா, ஆனந்த் (யதிஸ்), அபிமன்யு ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், யோகாம்பிகை, ஞானாம்பிகை மற்றும் ஜெகதாம்பிகை, பத்மநாதன், ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிதம்பரேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சங்கரநாதன், சிங்காரவேலு மற்றும் சத்தியசீலன், கோசலா, ராஜ்வசந்தி, மகேந்திரராசா, சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் டிவானுஜன், ஆகாசனா, சுஜானா, ஸ்ரவன், சம்யுக்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2023) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் இல.50, ஞானவைரவர் ஒழுங்கை, பண்டத்தரிப்பு வீதி, தெல்லிப்பழையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்டத்தரிப்பு வீதி, தெல்லிப்பழை.
T.P: 021 ... 9992. (சி-7371)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 வருடங்கள் கழித்து ஆசிய தடகள போட்டியில் இலங்கைக்கு வெள்ளிப்பதக்கம்



இவ்வாண்டுக்கான ஆசிய விளையாட்டுப் போட்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த நதீஷா தில்ஹானி லேகம்கே 61.57 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளார்.

17 வருடங்களின் பின்னர் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கைக்கு கிடைத்த முதல் தடகள பதக்கம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் இந்தியா தங்கப் பதக்கத்தையும் சீனா வெண்கலப் பதக்கத்தையும் வென்றன. இதே வேளை ஆசிய விளையாட்டுப் போட்டி நடத்தும் சீனா 161 தங்கம், 90 வெள்ளி, 46 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தம் 297 பதக்கங்களை வென்று முதலிடத்தை தக்கவைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஜப்பான் 33 தங்கம், 47 வெள்ளி, 50 வெண்கலம் என 130 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும் 32 தங்கம், 42 வெள்ளி, 65 வெண்கலம் என 139 பதக்கங்களை வென்று தென் கொரியா மூன்றாவது இடத்தையும் மேலும் இந்தியா 15 தங்கம், 26 வெள்ளி, 28 வெண்கலம் என 69 பதக்கங்களுடன் 4 ஆவது இடத்தைப் பிடித்துள்ள இதே நேரம் இலங்கை இரண்டு வெள்ளிப் பதக்கங்களுடன் 26 ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# உலகக் கிண்ண தொடரின் சர்வதேச தூதராக சச்சின்

## பரிந்துரைத்த ஐ.சி.சி



ஆண்கள் கிரிக்கெட் உலகக் கிண்ணம் 2023 தொடரின் சர்வதேச தூதராக இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) அறிவித்து இருக்கிறது.

இந்நிலையில் சர்வதேச தூதராக அறிவிக்கப்பட்டு இருப்பது குறித்து கருத்து தெரிவித்து இருக்கும் சச்சின் டெண்டுல்கர், 1987 இல் பால் பாய்-ஆக இருந்து தேசத்திற்காக ஆறு முறை உலகக் கிண்ண தொடரில் விளையாடி இருக்கிறேன்.

என் மனதில் உலகக் கிண்ண போட்டிகளுக்கு எப்போதும் சிறப்பான இடம் உண்டு."

"எனது கிரிக்கெட் பயணத்தில் 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்றது தான் மிகவும் பெருமை மிக்க தருணம்.

பல்வேறு விசேஷ அணிகளின், தலைசிறந்த வீரர்கள் ஐ.சி.சி ஆண்கள் உலகக் கிண்ண 2023 தொடரில் கடுமையாக போராட இருக்கின்றனர்.

மேலும் இந்தியாவில் நடைபெறும் இந்த தொடருக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன் என்று தெரிவித்து உள்ளார். (5-6)

# சர்வதேச போட்டிகளில் முதலாவது விக்கெட்டினை வீழ்த்திய வியாஸ்காந்



ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை அணியில் இடம்பெற்றுள்ள யாழ் மண்ணை சேர்ந்த முதலாவது வீரர் விஜயகாந் வியாஸ்காந் சர்வதேச போட்டிகளில் நேற்று முன்தினம் தனது முதலாவது விக்கெட்டை கைப்பற்றியுள்ளார்.

ஆப்கானிஸ்தானிற்கு எதிரான போட்டியில் அவர் தனது முதலாவது விக்கெட்டை வீழ்த்தியுள்ளார்.

நான்கு ஓவர்கள் பந்து வீசிய வியாஸ்காந் 28 ஓட்டங்களை கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

அண்மையில் தேசிய அணியில் இடம்பிடித்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# உலகக் கிரிக்கெட் குழுவின் தலைவரான குமார்சங்கக்கார



மெரில்போன் கிரிக்கெட் கழக (எம்.சி.சி) உலக கிரிக்கெட் குழுவின் புதிய தலைவராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார்சங்கக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

குமார்சங்கக்கார 2021 ஆம் ஆண்டு மெரில் போன் கிரிக்கெட் கழகத்தின் தலைவராக பணியாற்றிய நிலையில், தற்போது உலக கிரிக்கெட் குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே உலக கிரிக்கெட் குழுவின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

தற்போது இந்தக் குழுவில் குமார் தர்மசேனா, சௌரவ் கங்குலி, ஜூலன் கோஸ்வாமி, ஹீதர் நைட், சுசி பேட்ஸ், கிளேர் கானர், ஜஸ்டின் லாங்கர், இயன் மோர்கன், ரமீஸ் ராஜா, கிரேம் ஸ்மித் மற்றும் ரிக்கி ஸ்கெரிட் ஆகியோர் உள்ளனர். (5-6)

# உலகக் கிண்ண பயிற்சி போட்டிகளில் ஆஸி, ஆப்கான் அணிகள் வெற்றி



உலகக் கிண்ண கிரிக்கெட்டுக்கான பயிற்சி ஆட்டத்தில் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவும், பாகிஸ்தானும் ஐதராபாத்தில் மோதின. இதில் முதலில் பேட் செய்த அவுஸ்திரேலியா இறுதியில் 351 ரன்களைப் பெற்றுக் கொண்டது.

352 ரன்கள் இலக்கை நோக்கி களம் இறங்கிய பாகிஸ்தான் 47.4 ஓவர்களில் 337 ரன்களுக்கு ஓல்-அவுட் ஆனது. இதன் மூலம் அவுஸ்திரேலியா 14 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

திருவனந்தபுரத்தில் நடக்க இருந்த பிறிதொரு ஆட்டமான இந்தியா- நெதர்லாந்து இடையிலான பயிற்சி ஆட்டம் பலத்த மழையால் டொஸ் கூட போடப்படாமல் ரத்து செய்யப்பட்டது.

கவுகாத்தியில் நடந்த மற்றொரு ஆட்டத்தில் இலங்கை- ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. இதில் முதலில் பேட் செய்த இலங்கை 46.2 ஓவர்களில் 294 ரன்கள் சேர்த்து ஓல்-அவுட் ஆனது.

பின்னர் ஆப்கானிஸ்தான் ஆடிய போது மழை குறுக்கிட்டதால் 42 ஓவர்களில் 257 ரன்கள் எடுக்க வேண்டும் என்று இலக்கு மாற்றி அமைக்கப்பட்டது. அதை நோக்கி தடாலடியாக மட்டையை சுழற்றிய ஆப்கானிஸ்தான் 38.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 261 ரன்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. விக்கெட் கீப்பர் ரஹ்மனுல்லா குர்பாஸ் 119 ரன்களும் (92 பந்து, 8 பவுண்டரி, 9 சிக்சர்), ரஹ்மத் ஷா 93 ரன்களும் (82 பந்து, 10 பவுண்டரி, 3 சிக்சர்) விளாசினர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் தாமதத்தால் இலங்கைக்கு உதவி கிடைக்காமல் போகும் அபாயம்

## வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியீடு

(வோஷிங்டன்)

இலங்கையை சீனா தொடர்ந்து கடனில் வைத்திருப்பதால், சர்வதேச நாணய நிதியத்தின் சலுகைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தெரிவித்த முக்கிய விடயங்களில் ஒன்று, கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெறுவதாகும்.

இருதரப்பு கடனாளர்களிடமிருந்து நிதி உத்தரவாதத்தைப் பெறுவது சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும், ஆனால் இலங்கை இன்னும் அதைச் செய்யவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியம் முதல் மீளாய்வில் இலங்கை மீது குற்றம் சுமத்தவில்லை என்றாலும் இலங்கையின் கடன் தொடர்பில் சீனாவின் பின்னடைவு தற்போது பல வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளதாக ஆசிய மற்றும் மேற்குலக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இம்மாத நடுப்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீன விஜயத்தின் போது சீன ஜனாதிபதியை சந்தித்து கடன் தள்ளுபடி தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்தியாவிற்கும் மேற்குலகிற்கும் நெருக்கமான கொள்கையை பின்பற்றியதால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை சீனா தடுத்து இலங்கையை தண்டித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளன.

அத்துடன், இம்மாத இறுதியில் மொரோக்கோவில் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி மாநாட்டிற்கு முன்னதாக இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இலங்கையுடன் கடன் குறைப்பு உடன்படிக்கையை மேற்கொள்ளவுள்ளன.

எவ்வாறாயினும், கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை விரைவில் கிடைக்கும் என நம்பிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பேசாலை பகுதியில் கஞ்சாவுடன் பெண் கைது

(மன்னார்)

பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள காட்டாஸ் பத்திரி கிராம பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பொதியுடன் பெண் ஒருவர் நேற்று புதன்கிழமை மதியம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேசாலை இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் குறித்த வீட்டிற்குச் சென்று சோதனையை முன்னெடுத்த வேளை சுமார் 2 கிலோ 300 கிராம் கேரள கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது.

இதன் போது குறித்த வீட்டில் இருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மீட்கப்பட்ட கேரள கஞ்சா பொதி மற்றும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண் பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (5-6-285)

# கண்ணீர் அஞ்சலி



வலம்புரிப் பத்திரிகையின் செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய

திரு.மு.வாமதேவன் அவர்களின் அன்பு மனைவி

## திருமதி.நகுலாம்பிகை வாமதேவன்

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்

வலம்புரி நிர்வாகம்

# மது அருந்துவதால் தினமும் 50 பேர் உயிரிழக்கின்றனர்

(கொழும்பு)

நாட்டில் தினமும் 50 பேர் மது அருந்துவதால் உயிரிழப்பதாக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, உலகளாவிய ரீதியில் ஒவ்வோர் ஆண்டும் 3 மில்லியன் உயிரிழப்புகள் பதிவாகுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பல நோய்கள் மற்றும் விபத்துகள் ஏற்படுவதற்கும் மது அருந்துவதே முக்கிய காரணம் என்றும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (நி-5)

# யாசகர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டின் 65 நகரங்களில் மாத்திரம் சுமார் 3,000 முதல் 4,000பிச்சைக்காரர்கள் இருப்பதாக தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனம் அண்மையில் மேற்கொண்ட கணக்கெடுப்பில் இருந்து தெரியவந்துள்ளது.

அத்துடன் கணக்கிடப்பட்டவர்களின் தரவுகள் விரைவில் சேகரிக்கப்பட்டு அவர்களில் பதினெட்டு வயதுக்குட்பட்டவர்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இராசிபலன்

05.10.2023
புரட்டாதி 18, வியாழக்கிழமை
சஷ்டி முற்பகல் 10.00 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 12.20 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சர்வதேச ஆசிரியர் தினம்.

சந்திராஷ்டமம்-
சுவாதி, விசாகம்.

வளவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சவால்களைச் சமாளிக்கும் நாள்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாமடைவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**துலாம்** தந்தை வழி உறவில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராகும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** உறவினர்களின் சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**விருச்சிகம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கும்பம்** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பிறர் உதவியுண்டு.

**மிதுனம்** ஒருவகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயம் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி** தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**மீனம்** புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலை உயரும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

ஆதிக்கத்தை சாதிக்க முயன்றால் நீதிக்கும் ஒரு போர் நடத்த வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறை உட்பட சகல துறைகளிலும் அரசியல் ரீதியான ஊழல் நிறைந்துள்ளது

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம்



(யாழ்ப்பாணம்)

**நீதித்துறை உட்பட இலங்கையின் சகல துறைகளும் ஊழல் நிறைந்ததாகவும் அரசியல் தலையீடு கொண்டதாகவுமே இருக்கிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு நீதிபதி ரீ.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகி நாட்டைவிட்டு சென்ற விவகாரத்தில், தமிழ் மக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் தமிழ் தேசிய கட்சிகள் நேற்று யாழில் மனிதச் சங்கிலிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் நீதிமன்ற உத்தரவை மீறியே பௌத்த விகாரை கட்டப்பட்டது என்ற தீர்ப்பை வழங்கியதோடு, தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்க மறுத்து தீர்ப்பு வழங்கியதை அடுத்தே அவருக்கு எதிரான கருத்துக்களை சரத் வீரசேகர, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்கள் பாராளுமன்றத்திலே வெளியிட்டதன் மூலமே நீதிபதி இன்று நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

இது இலங்கையின் நீதித்துறையின் வெட்கக்கேடான விடயம் எனவும் சகல துறைகளும் ஊழல் நிறைந்ததாகவும் அரசியல் தலையீடு மிகுந்த இனவெறி கொண்டதாகவுமே உள்ளது என தெரிவித்தார். (5-6)

## இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்து கலந்துரையாடிய வடமாகாண ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் திருமதி.பி. எஸ்.எம். சார்ள்ஸ் நேற்று முன்தினம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாகலேவை கொழும்பில் அமைந்துள்ள இந்தியா இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சந்திப்பின் போது ஆளுநர் வடக்கின் எதிர்கால வளர்ச்சி குறித்து தாம் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் பற்றி விளக்கி கூறினார். அதேவேளையில் இந்திய அரசாங்கம் கடந்த காலங்களில் வழங்கிய ஆதரவிற்கு தமது நன்றியினையும் தெரிவித்தார்.

மேலும் உயர்ஸ்தானிகர், வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் வடக்கின் அபிவிருத்திக்கும் தங்களது தொடர்ச்சியான ஆதரவு உறுதி என்த் தெரிவித்திருந்தார். (5-6-33)

## ஆங்கில தின விழா

(யாழ்ப்பாணம்)

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆங்கில தின விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பாடசாலையின் பவள விழா மண்டபத்தில் அதிபர் வி.நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலய சேவை ஆலோசகர் எஸ்.ஸ்ரீதரன் கலந்து கொள்ளவுள்ளார். (5-6)

## முதியோர் தினமும் ஆண்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

கியூடெக் கரிதாஸ் நிறுவனத்தின் வழிநடத்தலில் சாவல் கட்டு முதியோர் சங்கம் நடத்தும் சர்வதேச முதியோர் தினமும் சங்கத் தின் 18 ஆவது ஆண்டு விழாவும் இன்று மாலை 2.30 மணிக்கு சாவல் கட்டு விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (5-6)

### பரிசளிப்பு விழாவும் ஆங்கிலப்பேச்சுப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி ரவீன்ஸ் இ.எம்.சி கல்வி நிறுவனத்தில் தரம் 11 வகுப்பு மாணவர்கள் பங்குபெறும் முன்ஆயத்தமில்லா ஆங்கிலப்பேச்சும் 12 ஆவது ஆண்டு விழா நிகழ்வின் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கரவெட்டி துன்னாலை மத்தி கோயில் கடவை கல்யாண மண்டபத்தில் குறித்த கல்வி நிறுவனத்தின் நிர்வாகி ப.ஈஸ்வரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை ஆதார மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவு அதிகாரி மருத்துவர் த.பிரியந்தி கலந்து கொள்ளவுள்ளார். (5-6)



நவாலி வடக்கு சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் கலைமகள் முன்பள்ளி நிலையத்தின் சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் மானிப்பாய் பிரதேச சபையின் சிறுவர் பூங்காவில் இடம்பெற்றது. (படம்:-சுபேசன்)

## நாவாந்துறைப் பிரிவில் நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நாவாந்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வள்ர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் (ஏ.ஆர்.வி) தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் 10 ஆம் திகதி மு.ப 9 - மு.ப 11 சனசமூக நிலையம் ஆறுகால்மடம், மு.ப 11 -பி.ப 1 செழியன் வீதி, பி.ப 2.30-பி.ப 4 புதிய குடியிருப்பு சனசமூக நிலையத்திலும் 11 ஆம் திகதி மு.ப 9-மு.ப 11 ஆர்.சி பாடசாலை நாவலர் வீதி, மு.ப11-பி.ப 1 ஆசாத் வீதி, பி.ப 2.30-பி.ப 4 1 ஆம் 2 ஆம் 3 ஆம் குறுக்குத்தெரு நாவலர் வீதியிலும் 12 ஆம் திகதி மு.ப 9-மு.ப 11 சேமக்காலை வீதி கெனடி வீதி, மு.ப11-பி.ப 1 ஜின்னா வீதி, பி.ப 2.30- பி.ப 4 சனசமூக நிலையம் வசந்தபுரத்திலும் 13 ஆம் திகதி மு.ப 9 -மு.ப 11 சனசமூகநிலையம் சூரியஔி, மு.ப11-பி.ப1 சனசமூக நிலையம் சென்.நீக்கிலஸ், பி.ப 2.30-பி.ப 4 கோவில் ஒழுங்கை நாவாந்துறையிலும் 16 ஆம் திகதி மு.ப 9 -11 காதி அபூக்கர் வீதி நாவாந்துறை, மு.ப 11-பி.ப 1 சனசமூக நிலையம் கண்ணாபுரம், பி.ப2.30-பி.ப 4 கற்குளம் நாவாந்துறை வெள்ளாந்தெரு நாவாந்துறையிலும் 17 ஆம் திகதி மு.ப 9-11 சிவன் பண்ணை சீனிவாசகம் வீதி சந்தி, மு.ப11-பி.ப1 கோணந்தோட்டம், பி.ப 2.30.பி.ப 4 சோலைபுரம் ஆகிய இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

ஓர் நாய்க்கான உரிமக் கட்டணமாக 50 ரூபாய் அறிவிடப்படும் என யாழ்.மாநகர சபை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (5-6)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் விசேட விருந்தோம்பல் கற்கை நெறிகள் ஆன உணவு மற்றும் குடிபான பரிமாறுபவர், அறை பராமரிப்பாளர் என்பன 16.10.2023 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இவை மூன்று மாத கால கற்கைநெறியாகும். மேலதிக விபரங்களிற்கு உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல.12/4 கே.கே.எஸ் வீதி (வீரசிங்கம் மண்டபம் 4 ஆம் மாடி) யாழ்ப்பாணம் அல்லது தொலைபேசி மூலம்021 222 7949, 021 221 1793, 077 716 1955 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிய முடியும் என இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (5-6)

(கிளிநொச்சி)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் மின்னிணைப்பு தகைமைச் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. மின்னிணைப்பு தகைமைச்சான்றிதழ் கற்கைநெறியினை களனி கேபிள் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக பொறியியல் பீடம் தமிழ்மொழியில் நடத்த திட்டமிட்டுள்ளது.

மின்னியல் தொழில்நுட்ப துறையில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதற்கான கற்கைக்காலமாக ஒரு வருடம் எனவும் பகுதிநேர கற்கை நெறியாக மாதத்தின் முதலாவது சனி மற்றும் ஞாயிறு இடம்பெறவுள்ளது.

அறிவியல் நகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள பொறியியல் பீடத்தில் நேர்முக பரீட்சை மூலம் தெரிவு இடம்பெறும். மேற்படி கற்கை நெறியை பயில்வதற்கு பொருத்தமான விண்ணப்பதாரிகள் 16.10.2023 இற்கு முன்னதாகவோ அல்லது அன்றோ கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது நேரிலும் ஒப்படைக்க கூடியவாறு சுயவிபரக்கோவையில் மின்னிணைப்பு தொழிலில் தொழில் செய்த சேவைக்காலம், சேவை விபரம் என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு ஒருங்கிணைப்பாளர் "மின்னிணைப்பு தகைமைச்சான்றிதழ் " மின் மற்றும் மின்னனு, பொறியியல் பீடம் , அறிவியல் நகர்,கிளிநொச்சி. கடித உறையின் மேல் மூலையில் "மின்னிணைப்பு தகைமைச்சான்றிதழ் கற்கைநெறி " என தெளிவாக குறிப்பிட்டு குறித்த முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (5-6-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஆணைக்குழுக்கள்; சர்வதேசத்தை திசைதிருப்பவே

## ஐ.நாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

(கொழும்பு)

**தமிழ் மக்களுக்கு எதிரான போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப் படுகொலைக்கான நீதி ஆகியவற்றில் இருந்து சர்வதேச சமூகத்தை திசைதிருப்புவதையும் நோக்கமாகக் கொண்டதே சிறிலங்காவின் "உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு" என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

நடைபெற்று வரும் ஜெனிவா ஐ.நா மனித உரிமைச்சபைக் கூட்டத்தொடரில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் உரையாற்றும் மனித உரிமைச் செயற் பாட்டாளர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

கடந்த பல ஆண்டுகளாக இலங்கை பத்துக்கும் மேற்பட்ட ஆணைக் குழுக்களை நிறுவியும் எந்த முடிவும் இல்லை. ஆணைக்குழுக்களை நிறுவுதல் என்பது சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் கருவியாகும்.

இம்முறை, தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுடன் ஒப்பிட்டு தன்னை நியாயப்படுத்த இலங்கை திட்டமிட்டுள்ளது. ஆனால் இரண்டுக்கும் இடையே ஒரு பெரிய வேறுபாடு உள்ளது.

அதாவது தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையம் என்பது பாதிக்கப்பட்டவர்களால் முன்மொழியப்பட்டதும் நிர்வகிக்கப்பட்டதுமாகும். ஆனால் இலங்கையில் பாரிய அட்டூழியங்களை நிகழ்த்திய வெற்றியாளர்களே இதன் முயற்சியை முன்வைக்கின்றனர்.

இதேபோன்ற வழிகளில் தொடங்கப்பட்ட முந்தைய "உண்மைக்கான ஆணையங்கள்" தோல்வியடைந்துள்ளன. ஏனெனில் நியமிக்கப்பட்ட ஆணையங்களை பாதிக்கப்பட்டவர்கள் நம்பவில்லை.

ஆணையங்களிடம் வாக்கு மூலம் வழங்க முன் வந்த பல பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு தரப்பினராலும் மிக மோசமாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே முன்மொழியப்பட்ட "உண்மை ஆணையத்தை" பரிசீலிப்பதற்கு முன்னர் இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலில் நீதியைப் பெற வழிகோல வேண்டும் என ஐ.நா மனித உரிமைச் சபையினை வலியுறுத்துகிறோம் என தெரிவித்திருந்தார். (நி-5)

# பல்கலைக்கழக அனுமதி முடிவடையும் காலஅவகாசம்

(கொழும்பு)

2022-2023 ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை அனுப்ப வழங்கப்பட்ட காலஅவகாசம் இன்றுடன் முடிவடைகிறது.

விண்ணப்பங்களை இணையத்தளத்தில் அனுப்பி வைக்க முடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். (நி-5)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:
076 097 3127
021 221 7603
Viber/ Whatsapp: 076 636 3378
E.mail:
Valampurii@yahoo.com


# அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு 1000 ரூபா மட்டுமே

## நிதியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அரச உத்தியோகத்தினரின் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்த நிலையில் 1000 ரூபா சம்பளம் அதிகரிக்கப்படும் என நிதியமைச்சு அறிவித்துள்ளது.


அனைத்து அரச ஊழியர்களின் சம்பளத்தையும் 20000 ரூபாவால் அதிகரிக்குமாறு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்ததாக அரச சேவை தொழிற்சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.எனினும் 1000 ரூபா சம்பளம் அதிகரிக்கப்படும் என நிதியமைச்சு அறிவித்துள்ளதாக சம்மேளனத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஒரு வருட காலமாக அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவில்லை: அரசியல்வாதிகள் தங்களுக்கு ஏற்ற வகையில் வசதியாக வாழ்கின்றார்கள். எனினும் அரச ஊழியர்களை கண்டுகொள்வதில்லை.

இந்த நிலை தொடர்ந்தால் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரச சேவை தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி-5)

# கப்ரால்,லலித் ஆகியோருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி





(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோருக்கு எதிரான வழக்கில் இருந்து இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு அமெரிக்காவில் வசிக்கும் பாகிஸ்தான் பிரஜைக்கு 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை பொது நிதியாக வழங்கி, குற்றச்செயலில் ஈடுபட்டதாக தினியாவல பாலித தேரர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, ஜனாதிபதியின் செயலாளர் என்ற வகையில், எவ்வித அங்கீகாரமும் இன்றி, இலங்கை மத்திய வங்கிக்கு பாகிஸ்தான் பிரஜைக்கு குறித்த தொகையை வழங்குமாறு, உடன்படிக்கை செய்துகொண்டதாக சுட்டிக்காட்டப்பட்டது. இந்த முறைப்பாட்டில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் தாக்கல் செய்யப்படவில்லை எனக் கூறி இந்த வழக்கை நேற்று புதன் கிழமை தள்ளுபடி செய்யுமாறு நீதிவான் திலின கமகே உத்தர விட்டுள்ளார். (நி-5)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 209

### இறுதிச் சடங்கினை வியந்து பார்த்த நபர்

உடன்கட்டை ஏற்றுதல்: நேரில் பார்த்த அனுபவத்தை எழுதி வைத்துள்ள ஐரோப்பியர் ..!

பெண் ஒருத்தி. இறந்து போன தன் கணவனோடு சேர்த்து எரிக்கப்படவிருந்த நிகழ்ச்சியைப் பார்க்கச் சென்றேன்.இந்த வேதனை தரும் கொடிய சம்பவத்தை நிகழ்த்தத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இடம் தஞ்சாவூர் கோட்டையிலிருந்து ஒருமைல் வடக்கே உள்ள காவிரி ஆற்றின் கரை .

அந்தப் பெண்ணுக்கு 16 வயதிற்கு உள்ளே தான் இருக்கும். வெள்ளை சேலை கட்டி இருந்தாள்.தலையிலும் கழுத்தைச் சுற்றிலும் வெள்ளை நிற மல்லிகை பூ சூடி இருந்தாள்.அவளைச் சுற்றி 20 பெண்கள் நின்று கொண்டு ஒரு வெள்ளைத் துணியை அவள் தலைக்கு மேல் வெயில் படாமல் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்து 20 அடி தள்ளி சில பிராமணர்கள் விறகுக் கட்டைகளால் எட்டடி நீளத்தில் நான்கடி அகலத்தில் சிதை தயாரித்துக் கொண்டிருந்தார்கள்.

முதலில் மூன்றடி உயரத்திற்கு கம்புகளை செங்குத்தாக நிறுத்தினார்கள் ..உள்ளே சிறிய மரத்துண்டுகளால் நிரப்பினார்கள் ..பக்கத்தில் மூங்கில் கழிகளின் மேல் கிடத்தப்பட்டிருந்த இறந்தவருக்கு 60 வயதுக்கு மேல் இருக்கும். இறந்தவரின் உடம்பைச் சுற்றி நான்கு பிராமணர்கள் முதல் முறை சூரியனுக்கு எதிர் திசையாகவும் அடுத்த மூன்று முறை சூரிய ஒளி வீசும் திசையிலுமாக சுற்றி வந்தார்கள்.

இப்போது அவர்கள் தங்களுடைய நீண்ட தலைமுடியை அவிழ்த்து விட்டுக் கொண்டும் உடனே மீண்டும் முடிந்து கொண்டும் ஏதோ மந்திரங்களை உச்சரித்தார்கள் ..

மற்றவர்கள் மந்திரம் சொல்லிக்கொண்டு கையில் இருந்த பச்சை இலையால் தண்ணீரை எடுத்து அருகில் குவித்து வைக்கப்பட்டிருந்த சாண எருக்களின் மீது தெளித்துக் கொண்டிருந்தார்கள் ..வடகிழக்கு மூலையில் அமர்ந்திருந்த ஒரு வயதானவர் கையில் இருந்த ஓலைச் சுவடியில் உள்ளதை வாசித்துக் கொண்டிருந்தார் ..

அந்தப் பெண்ணை மற்ற பெண்கள் அழைத்துச் சென்று ஆற்றில் குளிக்க வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவள் நெற்றியில் செந்நிறத்தில் பெரிய பொட்டு வைத்தார்கள். பிறகு ஈரமண் போன்று எனக்குத் தெரிந்த ஏதோ ஒன்றை பிசைந்து அவள் நெற்றியில் தடவினார்கள் ..

பிறகு அந்தப் பெண் சிதைக்கு அழைத்து வரப்பட்டு அவள் சிதையைச் சுற்றி மூன்று தடவை நடந்தாள்.. சிதையில் அவள் கணவன் உடல் ஏற்கனவே ஏற்றி வைக்கப்பட்டிருந்தது ..

இவள் யாருடைய துணையும் இல்லாமல் தானாகவே அதில் ஏறி தன் கணவன் உடல் அருகில் அமர்ந்தாள் ..

பிறகு தான் அணிந்திருந்த நகைகளின் திருகுகளை. திருகி கழற்றி அந்த ஆபரணங்களை கையில் எடுத்து மீண்டும் அந்த திருகுகளை பொருத்தி பக்கத்தில் நின்ற இரு பெண்களிடமும் ஆளுக்கு ஒன்றாக கொடுத்தாள் ..

பிறகு மெதுவாக அப்படியே மல்லாக்க சாய்ந்து படுத்தாள். ஒரு மஞ்சள் துணியால் தன் முகத்தை மூடிய பிறகு புரண்டு தன் கணவருக்கு நெருக்கமாக படுத்து தன் வலதுகையை தூக்கி அவர் மார்பின் மீது வைத்தாள்.. அதன் பிறகு எந்த அசைவுமின்றி காத்திருந்தார் ..பிராமணர்கள் இறந்தவரின் வாயில் சிறிது அரிசியையும் மீதி அரிசியை அவள் மீதும் தூவினார்கள் .. பிறகு சிறிது நீரை இருவர் மீதும் தெளித்தார்கள் ..

பிறகு ஒரு சிறிய கயிறு கொண்டு இருவரையும் சேர்த்துக் கட்டினார்கள் .. பிறகு.இருவர் உடலும் மற்றவர் கண்களில் மறையும் அளவுக்கு மரக்கட்டைகளை சுற்றி அடுக்கினார்கள் .. குறுக்கு வாக்கில் சிறிது கட்டைகளை அடுக்கிய பிறகு ஒரு பாத்திரத்தில் இருந்து எண்ணெய் போன்ற திரவத்தை அந்த பெண் இருந்த பகுதியில் ஊற்றினார்கள் ..

பிறகு மீண்டும் கட்டையை அடுக்கினார்கள் ..

இப்போது வெறும் விறகு குவியலாகவே எனக்குத் தெரிந்தது ..பிறகு முழுவதுமாக வைக்கோலால் மூடினார்கள் சுற்றிலும் கயிறால் இறுக்கிக் கட்டினார்கள் பிறகு ஒருவர் சிறிது வைக்கோலை எடுத்து அருகில் கனன்று எரிந்து கொண்டிருந்த சாண எருக்களில் பற்ற வைத்து அதை சிதையில் போட்டார் ..

பிறகு தீ நன்றாக பற்றுமாறு விசிறி விட்டார்கள்.அப்போது காற்றும் அதே திசையில் வீச தீ வேகமாக பற்றி கொண்டது ..ஏதோ ஒரு கிறீச்சிடும் ஒலியை நான் கேட்டது மாதிரியும் மற்ற இரைச்சலிடமிருந்து அதை தனிமைப்படுத்தி கேட்காதது மாதிரியும் இருந்தது.சில நிமிடங்களில் அந்த குவியல் சாம்பல் ஆனது ..நான் அந்த மொத்த நடவடிக்கைகளையும் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன் ..என் பார்வை முழுவதும் அந்தப் பெண்ணின் மீது தான் இருந்தது ..

இந்த கொடூரமான சடங்கை நடத்தியவர்கள் அதை நிறைவேற்றியதில் பெருமிதம் கொண்டிருந்த மாதிரியும். ஐரோப்பியன் ஒருவன் அதைப் பார்த்துக் கொண்டிருப்பது அவர்களை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை என்பதும் கோட்டைக்கு திரும்பிய வழியில் என் சிந்தனையாக இருந்தது ..

(1798 இல் ஐரோப்பியரால் எழுதப்பட்டது)

## சிக்கிமில் மேகவெடிப்பால் திடீர் வெள்ளம் 23 இராணுவ வீரர்கள் மாயம்



(டில்லி)

இமயமலைத் தொடரில் அமைந்துள்ள இந்திய மாநிலமான சிக்கிமில்லில் ஏற்பட்ட மேகவெடிப்பு காரணமாக லொச்சென் பள்ளத்தாக்கில் நேற்றுக் காலை டீஸ்டா ஆற்றில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது.

சாதாரணமாக மேகம் உருவாகும் நேரத்தை விட குறைந்த நேரத்தில் மழை மேகம் உருவாகி மெதுவாக பொழியாமல் மணிக்கு 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான அளவு மழையை ஒரே இடத்தில் கொட்டித் தீர்த்தால் அதுவே மேகவெடிப்பு எனப்படும்.

இது குறித்து குவாஹாட்டி இராணுவ மையத்தின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில், நேற்று காலை சிக்கிம் மாநிலத்தின் லொச்சென் பள்ளத்தாக்கில் டீஸ்டா ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் இராணுவ வாகனங்கள் மூழ்கின. 23 இராணுவ வீரர்கள் மாயமான நிலையில் அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்டம் அருகே பர்டாங் எனும் பகுதியில் இராணுவ வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் திடீரென சுங்தங் அணையில் இருந்து நீர் வெளியேற்றப்பட்டது. இதனால் அப்பகுதியில் நீர்மட்டம் 15 முதல் 20 அடிக்கு உயர்ந்தது. இதில்தான் இராணுவ வாகனங்கள் மூழ்கியுள்ளன. சில வாகனங்கள் சேற்றில் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (நி-5)

## விமான விபத்தில் அமெரிக்க செனட் சபை உறுப்பினர் குடும்பத்துடன் பரிதாபமாக உயிரிழப்பு



(வோஷிங்டன்)

விமானம் கீழே விழுந்து நொறுங்கியதில் அமெரிக்க செனட் சபை உறுப்பினர் குடும்பத்துடன் உயிரிழந்துள்ளார்.

அமெரிக்கா - டகோட்டா மாகாணத்தின் செனட் சபை உறுப்பினர் டக் லார்சன். இவர் உட்டா மாகாணம் கேன்யன் லாண்ட்ஸ் விமான நிலையத்தில் இருந்து சிறிய ரக விமானத்தில் புறப்பட்டுள்ளார்.

குறித்த விமானத்தில் அவரது மனைவி ஏமி மற்றும் இரண்டு மகன்களும் சென்றுள்ளனர்.அமெரிக்க பெடரஷன் நிறு வனத்துக்கு சொந்தமான பி.ஏ-28 என்ற அந்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கீழே விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 4 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழுந்தனர்.இந்த விபத்துக்கான காரணம் தொடர்பில் தேசிய விமான போக்குவரத்து வாரியம் விசாரணை நடத்தி வருகிறது. (நி-5)

## அவுஸ்திரேலியா தீ விபத்தில் 42,000 ஏக்கர் நிலம் எரிந்து நாசம்

### போராடும் 650 தீயணைப்பு வீரர்கள்



(கன்பரா)

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் ஏற்பட்ட புதர்த்தீயில் 42,000 ஏக்கர் நிலம் சேதமடைந்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் உள்ள புதர் பகுதியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அந்த நேரத்தில் காற்றானது பலமாக வீசியதால் தீயானது வேகமாக பரவியது.

24 மணி நேரத்தில் தீயானது 42 ஆயிரம் ஏக்கர் நிலத்தை நாசம் செய்தது. புதர்த்தீயானது 3 மடங்கு வேகத்தில் பரவ தொடங்கியதால் பொதுமக்களை உடனடியாக வீடுகளை விட்டு வெளியேறுமாறு உத்தரவு கொடுக்கப்பட்டது.

இந்த பயங்கர தீயை அணைக்க சுமார் 650 தீயணைப்பு வீரர்கள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். தீ விபத்து ஏற்பட்டுள்ள பகுதிக்கு கனமழை எச்சரிக்கை விடப்பட்டு இருப்பதால் மழையானது தீயை அணைக்க உதவும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (நி-5)

## இந்
## தெ

(ஓ
இந்
வதா
அதே
முறை
ச்சர்

ஜூன் மாத
சீக்கிய மத
ஹர்தீப் சிங்
கனடாவில்
நிலையில், அ
பின்னணியி
பதாக கனடா
ட்ரூடோ செ
குற்றம்சாட்டி
அதைத்
நாடுகளும்

## அமெ
## சேர்ந்

(ஸ்ராக்ஹோ
2023ஆம்அ
நோபல் பரிசு. அ
சேர்ந்த 3 விஞ்ஞா
அதன்படி.
புரூஸ் மற்றும் அ
நோபல் பரிசி
குவாண்டம் பு

## அமெரி
## சபாநா



(வோஷிங்
அமெரிக்க
யின் சபாநா
மெக்கார்த்தி
இருந்து நீக்க
குடியரசுக்
கெவின் மெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான ஆக்கபூர்வமான உறவை தொடருவதற்கு கனடா தயாராக உள்ளது

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

(ஒட்டாவா)

**இந்தியாவுடனான ஆக்கபூர்வமான உறவை தொடர்வதற்கு தயாராக உள்ளதாக ட்ரூடோ,தெரிவித்த அதேவேளை தூதரக உரையாடல்கள் தனிப்பட்ட முறையில் நடப்பது தான் நல்லது என்று கனடா அமைச்சர் மெலனி ஜோலியும் தெரிவித்துள்ளார்.**



ஜுன் மாதம் 18ஆம் திகதி, சீக்கிய மதத் தலைவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜர் என்பவர் கனடாவில் கொல்லப்பட்ட நிலையில், அந்த சம்பவத்தின் பின்னணியில் இந்தியா இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளிப்படையாக குற்றம்சாட்டியிருந்தார்.

அதைத் தொடர்ந்து இரு நாடுகளும் எடுத்த நடவடிக்கைகளால், இரு நாடுகளுக்குமிடையிலான தூதரக உறவில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் கனேடிய தூதரக அதிகாரிகள் சுமார் 40 பேரை இந்தியாவிலிருந்து வெளியேற்றுமாறு இந்தியா கனடாவை அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், இந்தியா, கனேடிய தூதரக அதிகாரிகளை வெளியேற்ற வலியுறுத்தியுள்ளது போல் கனடாவும் இந்திய தூதரக அதிகாரிகளை வெளியேறச் சொல்லுமா என கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.


அதற்கு பதிலளித்த ட்ரூடோ, நாம் பிரச்சினையை பெரிது படுத்த விரும்பவில்லை. நான் முன்பே கூறியதுபோல, இந்த கடினமான நேரத்திலும் இந்தியாவுடனான ஆக்கபூர்வமான உறவை தொடர்வதற்காக நம்மாலான பணிகளை நாம் செய்யப் போகிறோம் என்றார்.


இதே விடயம் குறித்து பேசிய கனேடிய வெளியுறவு அமைச்சரான மெலனி ஜோலியும் இந்தியாவுடனான வலிமையான தூதரக உறவையே கனடா விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

தாங்கள் இந்திய அரசுடன் தொடர்பிலிருப்பதாகவும் கனேடிய தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பை சீரியஸாக எடுத்துக் கொள்வதாகவும் தனிப்பட்ட முறையில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாகவும் தெரிவித்தார். (நி-5)

### இரசாயனவியலுக்கான நோபல் பரிசு

# அமெரிக்கா மற்றும் ரஷ்யாவை சேர்ந்த 3 விஞ்ஞானிகளுக்கு








(ஸ்ராக்ஹோம்)

2023ஆம்ஆண்டின் இரசாயனவியலுக்கான நோபல் பரிசு, அமெரிக்கா மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த 3 விஞ்ஞானிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மவுங்கி பவெண்டி, லூயிஸ் புரூஸ் மற்றும் அலெக்ஸி எகிமோவ் ஆகியோர் நோபல் பரிசினை பெற உள்ளனர். குவாண்டம் புள்ளிகளை கண்டுபிடித்து தொகுத்ததற்காக அவர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு நோபல் பரிசுடன், 8 கோடி ரூபாய்க்கான ரொக்கப் பரிசும் அளிக்கப்படும். ஆய்வாளர் ஆல்ப்ரெட் நோபலின் நினைவு தினமான டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி, ஆண்டுதோறும் இந்த பரிசுகள் வழங்கப்படும். (நி-5)

# அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் பதவி நீக்கம்



(வோஷிங்டன்)

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகரான கெவின் மெக்கார்த்தி அவரது பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த கெவின் மெக்கார்த்தி மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் அவர் தோல்வியைத் தழுவியுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு பதவி நீக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் ஒருவர் இவ்வாறு பதவி நீக்கப்படுவது இதுவே முதல் முறை என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பதவியில் இருந்து நீக்கப்பட்ட கெவின் மெக்கார்த்தி, மீண்டும் சபாநாயகர் பதவிக்கு போட்டியிட விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இத்தாலியில் சுற்றுலா பேருந்து கவிழ்ந்ததில் 2 சிறுவர்கள் உட்பட 21 பேர் உயிரிழப்பு

(உரோம்)



இத்தாலி நாட்டில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து மேம்பாலத்தில் இருந்தது கவிழ்ந்த விபத்தில் 21 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புகழ்பெற்ற வெனிஸ் நகரில் இருந்து கேம்ப்கிரவுண்டிற்கு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக் கொண்டு பேருந்து ஒன்று சென்ற வேளை வெனிஸுடன் பாலம் மூலம் இணைக்கப்பட்டுள்ள மெஸ்ட்ரே மாவட்டத்தில் உள்ள ரயில் பாதைகளுக்கு அருகில் செல்லும் போது சாலையை விட்டு விலகி விழுந்துள்ளது.

இதையடுத்து பேருந்து தீப்பற்றி எரிந்ததாக இந்த விபத்தில் பேருந்தில் இருந்த 2 சிறுவர்கள் உட்பட 21 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயம் அடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. படுகாயம் அடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

எனவே பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. விபத்திற்கான காரணம் குறித்து பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அனைவரும் மத்தியிலும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விரைவில் தளர்த்தப்படும் - ஷெகான்



(கொழும்பு)

பல வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் எதிர் வரும் வாரத்தில் தளர்த்தப் படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேம சிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

தனியார் வாகனங்கள் தொடர்பான 304 HS குறியீடு களின் இறக்குமதி கட்டுப்பாடு களை தளர்த்த அரசாங் கம் இன்னும் தீர்மானிக்க வில்லை.


தற்போதுள்ள அந்நிய செலாவணி பற்றாக்குறை மற் றும் மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்க வேண் டியதன் காரணமாக, சில பொரு ட்களை இந்த நாட்டிற்கு இறக்கு மதி செய்வதற்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டது.

அதன்படி, சுங்கத் திணைக் களம் மற்றும் குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் தங்கள் வணிகத்தை மேற் கொள்வதில் பாதிப்பு ஏற்பட்டது. அதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட் டன.

தற்போதைக்கு, HS குறி யீடு 304 தொடர்பான கட்டுப் பாடுகளைத் தவிர, ஏனைய பல வாகனங்கள் தொடர்பான கட் டுப்பாடுகளைத் தளர்த்துவோம் என்று நம்புகிறோம் என குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# சர்வதேச விசாரணை வேண்டாம்

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

சர்வதேச விசாரணை வேண்டாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துடன் தானும் உடன்படு வதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

நேற்று புதன்கிழமை இடம் பெற்ற மத வழிபாட்டை அடுத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக கும் போதே மகிந்த ராஜ பக்ஷ இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இதேவேளை தமக்கு மீண் டும் ஆட்சியை கைப்பற்றும் எண் ணம் இல்லை என்றும் புதிய தலைமைத்துவத்தின் கீழ் கட்சி முன்னோக்கி செல்ல வேண் டும் என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (நி-5)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 |
| தக்காளி | 150 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 150 | 150 |
| கோவா | 200 | 160 | 200 |
| கரட் | 200 | 300 | 300 |
| பூசணி | 60 | 60 | 80 |
| புடோல் | 80 | 100 | 160 |
| வாழைக்காய் | 200 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 240 | 250 |
| பாகற்காய் | 400 | 400 | 450 |
| வெண்டக்காய் | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 150 | 200 |
| லீக்ஸ் | 160 | 140 | 160 |
| பீற்றூட் | 120 | 140 | 160 |
| கறிமிளகாய் | 250 | 280 | 350 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 120 |
| போஞ்சி | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 1100 | 1200 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-90 |
| இராசவள்ளி | 400 | 500 | 550 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 400 |
| முள்ளங்கி | 80 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 100 | 150 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2930

Search for people, places and things

### மெல்லினா

ஆசைகளை துறந்தவன் தான் புத்தன் என்றால்,



மிடில் கிளாஸ் குடும்பத்தில் பிறந்தவர் எல்லோருமே புத்தன் தான் சேர்...!

### நிவாஷ்

விளக்கு எரிஞ்சா வெளிச்சம் வருது... பல்பு எரிஞ்சாலும் வெளிச்சம் வருது...



ஏன் அண்ணே வயிறு எரிஞ்சா மட்டும் வெளிச்சம் வர மாட்டேங்குது...

### சுதர்சினி

நாட்டில எவ்ளோ பிரச்சினை இருந்தாலும் வீட்டில் என்ன குழம்பு வைக்கிறது என்பது தான் பெரிய பிரச்சினையா இருக்குது.



### தரன்




### தீபிகா

அடேய் இதுதான் இதயம் இதில தான் காதல் வருமாம்...



இதுல எப்பிடி அண்ணே காதல் வரும்... குத்தினா ரத்தம் தான் வரும்

### சூரியா

இதுதான் வாழ்க்கை இருபது வயது வரைக்கும் கொஞ்சம் கஷ்டமா தான் போகும்... இருபது வயதுக்கு பிறகு நல்ல சந்தோசமாக போகுமா?



அதான் இல்ல அதவிட மோசமா கேவலமா போகும்..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறை மீதான அடக்குமுறைக்கெதிராக

# கறுப்புக்கொடி ஏந்தி மன்னாரில் கவனயீர்ப்பு

(மன்னார்)

"சுயாதீன நீதித்துறையில் அரசியல் தலையீட்டை தடுப்போம்" எனும் தொனிப்பொருளில் நீதித்துறை, நீதிபதிகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அடக்கு முறைக்கு எதிராக நேற்று மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு.



மன்னார் மாவட்ட இளைஞர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்பினர் இணைந்து கறுப்பு கொடிகளை ஏந்தி மன்னார் நகர பிரதான சுற்றுவட்ட பகுதியில் குறித்த போராட்டம் முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை இடம்பெற்றது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்பு கொடிகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான அடக்குமுறை செயற்பாடுகளை கண்டித்து பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சட்டத்தரணி செல்வராசா டினேசன், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் யாட்சன் பிகிராடோ,பணியாளர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (5-6-285)

## செட்டிக்குளம் வீரபுரம் பகுதியில் ஆலய விக்கிரகங்கள் பெயர்த்தெடுப்பு

(குருமன்காடு)

வவுனியா செட்டிக்குளம் வீரபுரம் பகுதியில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் ஆலய சிலைகள் விசமிகளால் இருப்பிடங்களில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று புதன்கிழமை காலை ஆலயத்திற்கு பூஜைக்காக சென்ற ஆலயத்தின் குருக்கள் நவக்கிரக விக்கிரகங்கள், வைரவர், முருகன் மற்றும் அம்மன் விக்கிரகங்கள் இருப்பிடங்களில் இருந்து பெயர்த்து எடுக்கப்பட்டு சேதமாக்கப்பட்டமை அவதானித்துடன் ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து நிர்வாகத்தினரால் செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-6-250)

## திறன் குறைந்தவர்களுக்கான வாய்மொழிப் பரீட்சை நாளை

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவில் எழுதுதல், வாசித்தல் திறன் குறைத்தவர்களுக்கான வாய்மொழிப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடத்துவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை சாரதி அனுமதிப்பத்திரம் பெறாதவரியவர்கள் இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது பயன்படுத்திக் கொள்ளுமாறும், பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன் ஏ9 வீதி, கிளிநொச்சி பழைய கச்சேரி வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட மோட்டார் வாகன, போக்குவரத்துப் பிரிவின் மாவட்ட காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்வதுடன், மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவின் பரிசோதகர் ஜி.எச். டி. கே. விஜயசேகரா அறிவித்துள்ளார். (5-6-316)

## பலதரப்பட்ட விடயம் தொடர்பில் கிளி.மாவட்ட விவசாய கூட்டத்தில் ஆராய்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின், மாவட்ட விவசாய குழுக்கூட்டம் நேற்று புதன்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாடு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது மாவட்ட விவசாய பிரிவின் நீர்ப்பாசனத் திணைக்களத்தின், மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின், விவசாயம் காப்புறுதிசார், மாகாண விவசாய திணைக்களத்தின், கமநல அபிவிருத்தி திணைக்கள மற்றும் விதை ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. மேலும், தேசிய உணவு உற்பத்திக்கு பங்களிப்புச் செலுத்தும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் மாவட்டத்தில் உள்ள குளங்களை புனரமைத்தல், மேய்ச்சல் நிலம் உள்ளிட்ட ஏனைய பல விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் இணைப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர், துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள் மற்றும் விடயதான உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரி, மாவட்ட விவசாய பிரிவின் உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (5-6-315)

## துப்பாக்கிச் சூட்டில் இராணுவ வீரர் காயம்

(நெளுக்குளம்)

இராணுவ வீரர் ஒருவர் துப்பாக்கி சூட்டில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குறித்த துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, முல்லைத்தீவு நாயாறு பகுதியிலுள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ வீரர் ஒருவர் தவறுதலாக இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் காலில் சிறுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலதிக விசாரணைகளை வைத்தியசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(5-6-299)

## முல்லையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நிலக்கடலை வழங்கிவைப்பு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு நேற்று கொக்குத்தொடுவாய் கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து நிலக்கடலை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு ஒரு ஏக்கர் பயிர்ச்செய்கைக்கான தலா 50 கிலோ விதை நிலக்கடலை உள்ளீடுகளும் அத்துடன் ஆரம்ப கட்ட நிலபண்படுத்தலுக்காக சிறுதொகை கொடுப்பனவும் தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் நிதிப் பங்களிப்பில் கொக்குத்தொடுவாய் கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது.

(5-6-299)



மன்னார் யாழ் பிரதான வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட சிப்பியாறு புனித அந்தோனியார் ஆலயம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை குறித்த ஆலயத்தை அபிஷேகம் செய்து திறந்து வைத்தார். (படங்கள்: ஜோசப்நயன்)

## விசாரணைக்காக அழைப்பு விடுக்க வந்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல் சந்தேகநபர் கைது

(தருமபுரம்)

சந்தேகநபர் ஒருவரை பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்க வந்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது குறித்த நபர் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி இராமநாதபுர பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு குறித்த நபரை அழைப்பு விடுக்க வந்த வேளை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.


இதனையடுத்து காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் சம்பவத்துடன் தொடர்புடைய நபரை இராமநாதபுர பொலிஸார் கைது செய்துள்ளனர். (5-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பாகம் - 2 பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 300



"இல்லை, ஐயா, பட்டரே! என் தலையிலே கொம்பு முளைக்கவில்லை கையிலேதான் இந்தக் கொம்பு இருக்கிறது. என்னை யார் என்று கேட்டீர் அல்லவா? சொல்லுகிறேன். திருக்குருகூரில் அவதரித்து வேதம் தமிழ் செய்த நம்மாழ்வாரின் அடியார்க்கு அடியான். மற்றவர்கள் மண்டையில் நையப்புடைக்கும் கைத்தடியான்" என்று தடியைத் தூக்கிக் காட்டினான்.

"ஆழ்வார்க்கடியார்க்கடியானே! நீ ஏன் உன் தலையில் முன்புறத்தில் குடுமி வைத்திருக்கிறாய்? அதையும் மழுங்கச் சிரைத்து விட்டாயானால், உன் மண்டையில் உள்ளும் புறமும் ஒன்றாயிருக்கும்" என்றார் ஒரு சைவர்.

"பட்டர்களே! இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்திலே வந்து என் முன் குடுமியை எடுத்து விடுவதாகவே எண்ணியிருந்தேன். அதற்குள் நீங்கள் ஞாபகப்படுத்தினீர்கள்."

"அடே! நாவிதர் தெருவுக்குச் சென்று ஒரு நாவிதனை அழைத்து வாருங்களடா. கத்தியை நன்றாய்த் தீட்டிக் கொண்டு வரச் சொல்லுங்கள். இவனுடைய சிகையை ஆணி வேரோடு களைந்தெறியச் சொல்லலாம்" என்றார் ஒரு பட்டர்.

"இதற்கு நாவிதனைக் கூப்பிடுவானேன்? நாமே அந்தக் கைங்கர்யம் செய்து விடலாமே? நல்ல கூர்மையான கத்தியாகக் கொண்டு வாருங்கள்" என்றார் இன்னொரு சைவர்.

"கொஞ்சம் பொறுங்கள் இன்னும் ஒரு விஷயம் பாக்கியிருக்கிறது. ஒரு காலத்தில் என் தலை முழுவதும் சிகை அடர்த்தியாக இருந்தது. ஒரு சைவனுடைய மண்டையை உடைத்து விட்டு என் சிகையிலிருந்து ஒரு ரோமத்தை வாங்கிவிடுவதென்று விரதம் எடுத்துக் கொண்டேன். அதன்படி முக்காலே அரைக்கால்வாசி சிகை தீர்ந்து விட்டது. இந்த ஊரில் என் முழுவிரதத்தையும் நிறைவேற்றிக் கடலில் ஒரு முழுக்குப் போடப் போகிறேன். எங்கே, ஒவ்வொருவராக உங்களுடைய மண்டையைக் காட்டுங்கள் பார்க்கலாம்" என்று ஆழ்வார்க்கடியான் கைத்தடியை ஓங்கினான்.

"அடடே! இந்த வைஷ்ணவன் என்ன துடுக்காகப் பேசுகிறான்?" என்று சொன்னார் ஒருவர்.

"எங்கள் எல்லாருடைய மண்டையையும் உடைத்து விடுவாயா? உன்னால் முடியுமா?" என்று கூறினார் இன்னொருவர்.

"முடியாமலா முக்காலே அரைக்கால் பங்கு சிகையை எடுத்து விட்டிருக்கிறேன்?" என்று கூறி ஆழ்வார்க்கடியான் தடியை வேகமாகச் சுழற்றத் தொடங்கினான்.

"அடியுங்கள்! பிடியுங்கள்! கட்டுங்கள்! வெட்டுங்கள்!" என்று தலைக்குத் தலை கத்தினார்களே தவிர, அக்கூட்டத்தில் யாரும் ஆழ்வார்க்கடியானுக்கு அருகில் நெருங்கவில்லை.

அச்சமயம் வெகுசமீபத்தில் எழுந்த ஒரு கோஷம் அவர்கள் எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்தது. "திரிபுவன சக்கரவர்த்தி சுந்தர சோழ பராந்தகரின் மகாமான்ய முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மாதி ராஜர் வருகிறார்! பராக்! பராக்!"

எல்லோரும் திகைத்துப் போய்க் கோஷம் வந்த திசையை நோக்கினார்கள். ஆழ்வார்க்கடியான் எல்லாரிலும் அதிகமாகத் திகைத்துத் தனது கைத்தடியைக் கக்கத்தில் வைத்துக்கொண்டு பார்த்தான். அவர்கள் நின்று சண்டையிட்ட இடம், இராமேசுவரக் கோயில் மதிலின் ஓரமான ஒரு முடுக்கு. அந்த முடுக்குத் திரும்பியதும் எதிரே விரிந்து பரந்த கடல். அக்கடலின் காட்சியோ கண் கொள்ளாத அற்புதக் காட்சியாயிருந்தது. பெரிய பெரிய மரக்கலங்கள், நாவாய்கள், சிறிய கப்பல்கள், படகுகள், ஓடங்கள், வள்ளங்கள், வத்தைகள், கட்டுமரங்கள் ஆகியவை நெடுகிலும் வரிசை வரிசையாகக் கண்ணுக் கெட்டிய தூரம் காணப்பட்டன. பாய்மரங்களிலிருந்து படபடவென்று காற்றில் அடித்துக் கொண்டு பறந்த வெண்ணிறப் பாய்கள், கடலையும் வானத்தையும் தூரத்திலே திட்டுத் திட்டாகத் தோன்றிய பல தீவுகளையும் பெரும்பாலும் மறைத்துக் கொண்டிருந்தன.

மேலே சொன்னவாறு கட்டியங் கூறிக்கொண்டு காவல் வீரர்கள் முன்னும் பின்னும் தொடர, சோழ சாம்ராஜ்யத்தின் புகழ் பெற்ற முதன் மந்திரி அன்பில் அநிருத்தப் பிரமராயர் ராஜ கம்பீரத்துடன் ஒரு படகில் வந்து கொண்டிருந்தார்.

(தொடரும்...)

# தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு

## யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### நூல்கள் பற்றி பெரியவர்கள் கூறியவை



நல்ல நூல்களை படிக்காதவன், படிக்க இயலாதவனை விட மேன்மைக்குரியவன் அல்ல.

தோமஸ் டிரையர்

ஒரு நூலின் மதிப்பை அதனால் உண்டாகும் பயன்தான் நிர்ணயிக்கும். அதன் விலை அல்ல.

ஜெர்ரி வாக்கர்

சில நூல்களை நுகர வேண்டும் சிலவற்றை மெல்ல வேண்டும். சிலவற்றை விழுங்க வேண்டும். சிலவற்றை ஜீரணிக்க வேண்டும்.

பேக்கன்

ஒருவன் விரும்பிப் படிக்கும் நூல்களை எனக்கு காட்டுங்கள். அவன் குணத்தை நான் சொல்லி விடுகிறேன்.

வைர்மிட் செல்

## வாசிப்பின் பெருமை

வாசிப்போம் வாரீர் வாசிப்போம் வாரீர்
வையகத்து பெருமைகளை வாசிப்போம் வாரீர்
வாசிப்பின் பெருமைகளை வானறியச் செய்திடுவோம்
வாசித்தே அறிந்திடுவோம் வாசிப்பின் பெருமைதனை

ஐசாக் நியூட்டன், தோமஸ் அல்வா எடிசன்,
பாரதியார், அப்துல்கலாம் என்பவர் போல்
வாசித்தே உயர்ந்தவர்கள் எத்தனை எத்தனைபேர்
வாசிப்பின் பெருமைதனை நாமும் பெற்றிடுவோம்.

தாமாகக் கற்பதற்கு வானொலி, தொலைக்காட்சி,
கம்பியூட்டர் என எத்தனைதான் வந்தாலும் நீர்
வாசிக்க ஒரு நிமிடம் தவறாது எடுத்திடுவீர்
வாசித்தே வளம் பெருக்கிடுவீர்.

வாசிப்பின் மாதமாம் ஒக்டோபர் தன்னில்
நாவல்கள் சிறுகதைகள் என நல்ல நல்ல
புத்தகத்தை தேடியே வாசிப்போமென
எடுத்திடுவீர் ஒரு சத்தியத்தை.

மு.லக்ஷனா,
தரம் 5B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மித மிஞ்சிய நேர்மை ஆபத்தானது நேரான மரங்களே முதலில் வெட்டப்படும். நேர்மையான மனிதர்களே முதலில் குறிவைக்கப்படுவர். – சாணக்கியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கோழியைக் கேட்டு குழம்பு வைப்பதில்லை

சர்வதேச விசாரணைக்கு இடமேயில்லை என அறுதிபடக் கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

சர்வதேச விசாரணை இடம்பெற்றால், தமிழ் இன அழிப்புப் போர் நடத்திய ஆட்சியாளர்கள் தூக்கு மேடைக்குச் செல்ல வேண்டி வரும்.

போர்க்குற்றம் புரிந்த படையினர் சிறை செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

ஆகையால் சர்வதேச விசாரணையை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதையே இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் வந்தாலும் சொல்லுவர்.

அப்படியானால் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவில் ஜனாதிபதிப் பதவியை பெற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க அப்படிச் சொல்லமாட்டாரா என்ன?

பரவாயில்லை. கோழியைக் கேட்டுக் குழம்பு வைப்பதில்லை என்பது அனைவரும் அறிந்ததே.

ஆக, சர்வதேச விசாரணை என்பதை தனித்து இலங்கை அரசாங்கம் மட்டும் தீர்மானித்துவிட முடியாது.

மாறாக, ஐ.நா சபை மற்றும் இலங்கை ஆட்சியாளர்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் என்போரும் சர்வதேச விசாரணை பற்றிய தீர்மானத்தை எடுக்கின்ற தரப்புகள் என்பதை இந்த நாட்டின் பேரினவாத ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆம், சிறுபான்மை இனம் என்பதற்காக தமிழ் மக்களைக் கொன்றொழிக்க முடியும் என்று யார் நினைத்தாலும் அது மிகத் தவறான நினைப்பாகும்.

மாறாக, பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேச விசாரணையை தொடர்ச்சியாக வலியுறுத்துவார்களாக இருந்தால், அந்த விடயத்தில் அந்த மக்களின் அரசியல் தரப்புகள் உறுதியாக இருந்தால் சர்வதேச விசாரணை என்பது சாத்தியமாகக் கூடிய வாய்ப்பு நிச்சயம் உண்டு.

உண்மை. அண்மையில் சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒன்று அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் வாச்சாத்தி என்ற கிராமத்தில் வனத்துறை அதிகாரிகளும் பொலிஸாரும் சேர்ந்து அந்தக் கிராமத்து பெண்களை வன்கொடுமை செய்ததுடன் அந்தக் கிராமத்தை துவம்சம் செய்து போலியான குற்றச்சாட்டுக்களை முன் வைத்து கிராம மக்கள் பலரையும் சிறையில் அடைத்தனர்.

ஆனால் வனத்துறையினரும் பொலிஸாரும் அந்தக் கிராம மக்களுக்குச் செய்த கொடுமை தொடர்பில் விசாரணை நடத்திய சென்னை உயர்நீதிமன்றம் சம்பவத்தில் ஈடுபட்ட வனத்துறையினரையும் பொலிஸாரையும் மிக மோசமான குற்றவாளிகளாக அறிவித்து 30 ஆண்டுகளுக்குப் பின்னர் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஆக, காலம் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அது மாற்றமுறும். அப்போது நினைத்துப் பார்க்க முடியாத சம்பவங்கள் நடந்தாகும்.

# நாட்டினை கட்டியெழுப்ப ஒன்றிணைவோம் வாருங்கள்

## எதிர்க்கட்சியினருக்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களில் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற முன்வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்தார்.

பாராளுமன்றத்திற்கு நேற்று புதன்கிழமை வருகை தந்திருந்த ஜனாதிபதி, சபையில் விசேட கூற்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

நான் சரியென்று இரண்டு பக்கத்தில் உள்ளவர்களும் கூறுகின்றனர். அப்படியென்றால் இரண்டு பக்கத்தில் உள்ள வர்களும் ஒன்றாக இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம். ஏன் எங்களுக்கு இணைந்து செயற்பட முடியாது?.

அத்துடன், நாடு தற்போது நெருக்கடியான நிலைமையில் இருக்கிறது. இந்த நேரத்தில் இரண்டு தரப்பினரும் ஒன்றிணைந்தே நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.

எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும் நாம் அனைவருக்கும் ஒரே அச்சுறுத்தலே உள்ளது. அதில் இருந்து மீள்வதற்கு வேறு வேலைத்திட்டங்கள் இருக்குமாக இருந்தால் அதனை கூறுங்கள். ஆனால் யாரும் வேலைத்திட்டங்களை முன்வைக்கவில்லை.

தற்போதைய கொள்கைத் திட்டங்களை இரண்டு தரப்பிலும் உள்ள வர்கள் ஏற்றுக்கொள்வதால் இரண்டு தரப்பினரும் ஒன்றாக வேலை செய்து நாட்டுக்கு காட்டுவோம் என்றார். (ம-7)

# இலங்கையில் புற்றுநோய் சிகிச்சைக்கு காலாவதியான இயந்திர பயன்பாடு

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

இலங்கையில் புற்றுநோய் சிகிச்சைக்காக காலாவதியான இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றில் நேற்று குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் 30,000 புற்றுநோயாளிகள் கண்டறியப்படுகின்றனர்.

அவர்களுக்கு கதிர் வீச்சு சிகிச்சை அளிப்பது செலவு குறைந்த முறையாகும்.

லினாக் (நேரியல் முடுக்கி) என்ற சாதனம் இதற்குப் பயன்படுத்தப் பட்டாலும், கோபால்ட் (Cobalt Therapy) கதிர் வீச்சு சிகிச்சை அலகு சாதனமே நமது நாட்டில் பயன்படுத்தப்படுகிறது.

வெளிநாடுகளில் உள்ள விலங்குகளின் புற்றுநோய்க்கு கூட இது பயன்படுத்தப்படுவதில்லை என்பதனால் இந்த லினாக் இயந்திர சாதனத்தை பயன்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி மற்றும் கராப்பிட்டிய ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு இந்த சாதன அலகுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், பதுளை, இரத்தினபுரி, குருநாகல், அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை போன்ற இடங்களில் உள்ள வைத்திய சாலைகளுக்கு இரண்டாம் கட்டமாக இந்த சாதன அலகுகளை வழங்குவதற்கு 2 மில்லியன் டொலர்களே செலவாகும். சுகாதார அமைச்சின் சில அதிகாரிகள் கோபால்ட் சாதனங்களை தொடர்ந்தும் பயன்படுத்த முயற்சிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதன் விளைவாக, ஒரு லினாக் இயந்திரத்தின் விலையில் பாதி செலவிடப்பட்டு, காலாவதியான, வெளிநாடுகளில் விலங்குகளுக்குக்கூட பயன்படுத்தாத இயந்திர சாதன அலகுகளை இறக்குமதி செய்யத் தயாராகியுள்ளனர்.

இந்த காலாவதியான இயந்திர சாதனங்களுக்குப் பதிலாக லினாக் இயந்திர சாதன அலகுகளை பயன்படுத்து மாறும் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார்.

இந்தியாவில் இருந்து பெனசியா என்ற கதிர் வீச்சு இயந்திரம் இறக்குமதி செய்யப்படவுள்ளது என்றாலும், இந்த இயந்திர சாதன அலகுகள் இந்தியாவில் கூட பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படுவதில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறினார். (ம-7)

# E.P.F, E.T.F ஒன்றிணைக்கப்படும்

## ரணில் நம்பிக்கை

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய இரண்டும் ஒன்றிணைக்கப்பட்டு சுயாதீன சபையின் கீழ் பணிகள் முன்னெடுக்கப்படும் என நம்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட மூன்று விதிமுறைகள் மற்றும் சிறப்புப் பொருட்கள் வரிச் சட்டத்தின் கீழ் உள்ள விதிகளை நேற்று பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துகொண்ட போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்திற்கு வருகை தந்திருந்தார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன ஊழியர் சேமலாப நிதியின் சுயாதீன முகாமைத்துவம் தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** சமனங்குளம், சுந்தரபுரம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

## புலமைப்பரிசில் பரீட்சை

# 11 ஆம் திகதி முதல் மேலதிக வகுப்புகளுக்கு தடை

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பான கருத்தரங்குகள், மேலதிக வகுப்புகள் மற்றும் செயலமர்வுகள் எதிர்வரும் 11ஆம் திகதி நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த தடையை மீறி செயற்படுவோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் 15 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) 2,888 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II



03

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அதன் பிறகு சிம்மாசனத்தை எடுத்துக் கொண்ட இரண்டாம் புவனேகபாகு மன்னன் தலைநகரை குருநாகலுக்கு மாற்றினார்.

### ஸ்ரீசங்கபோதிவம்சம் குருநாகல் இராசதானி (கி.பி1293 - 1341)

குருநாகல் இராசதானி கி.பி. 1293ஆம் ஆண்டு இரண்டாம் புவனேகபாகுவால் இராசதானியாக்கப்பட்டது. அவனுக்குப் பின்னர நான்காம் பராக்கிரமபாகு அரசனானான். குருநாகலை காலத்தின் சிறந்த அரசனாக இவன் போற்றப்பட்டான். புத்த சமயத்தினதும் கல்வியினதும் வளர்ச்சிக்காக இவன் பல பணிகளை ஆற்றினான். இவனது ஆட்சி குருநாகல் பிரதேசத்தில் மட்டுமின்றி கண்டி, கேகாலை, கொழும்பு, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய தென்மேற்குப் பிரதேசங்களிலும் பரவியிருந்தது. இவனது ஆட்சியின் பின்னர் பதினைந்து ஆண்டுகள் வரை பல அரசியல் நடவடிக்கைகள் நிகழ்ந்துள்ளன. என்றாலும் அடுத்து மூன்றாம் புவனேகபாகு, விஜயபாகு எனும் இருவர் அரசாண்டதாகக் குறிப்பிடப்படுகின்றத்து.

### இரண்டாம் புவனேகபாகு (கி.பி 1293-1302)

இம்மன்னரின் ஆட்சிக்காலம் கி.பி 1293 முதல் 1302 ஆகும். ஆனால் பல நூல்களில் இவரது ஆட்சிக் காலம் கி.பி 1311 முதல் 1325/6 எனவும் சொல்லப்படுகிறது. வெளிநாட்டவர் எதிர்ப்பு, சகோதர குரோதங்கள், யாழ்ப்பாண அரசின் எதிர்ப்புக்கள் போன்ற காரணங்களினால் பொலநறுவையில் இருந்த இராசதானி தம்பதெனியா, யாப்பகூவ, குருநாகல் என மாறியது. இரண்டாம் புவனேகபாகு குருநாகலையில் கி.பி 1293 முதல் 1302 வரை ஆட்சி செய்தான். இம்மன்னனுக்கு பல மனைவியர் இருந்தும் வாரிசு இல்லாதிருந்தது. மாற்று மதப் பெண்ணை மணந்தால் ஆண் வாரிசு கிடைக்க வாய்ப்புள்ளது என்ற ஜோதிடர்களின் கூற்றுக்கு ஏற்ப அஸ்வதும என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் பெண்ணை மணந்தான். அவனுக்குக் கிடைத்த மகன்தான் வட்டிமி (வத்திமி) என்றும் கலேபண்டார என்றும் அழைக்கப்படுகின்றான்.

கலேபண்டார வளர்ந்து இளவயதான போது ஒரு துயர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகின்றது. புவனேகபாகு மன்னன் ஒரு போருக்குச் சென்றான். அந்தப் போரில் அவன் வெற்றியும் பெற்றான். மன்னன் போரில் வென்றால் வெள்ளைக் கொடியையும் தோற்றால் கறுப்புக் கொடியையும் காட்டுமாறும் கூறியிருந்தனராம். வெற்றிக் களிப்பில் மது அருந்திய படை வீரன் வெள்ளைக்குப் பதிலாக கறுப்புக் கொடியைக் காட்டியதால் மன்னன் தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறப்படுகின்றது.

மன்னனின் மரணத்தின் பின்னர் மன்னனின் முஸ்லிம் மகன் கலேபண்டார முடிசூடப்பட்டான். முஸ்லிம் ஒருவர் மன்னராக இருப்பதை மதகுருக்களும் முக்கியஸ்தர்களும் விரும்பாததால் மலை உச்சியில் யாகம் செய்ய என அழைத்துச் செல்லப்பட்டு மன்னன் மலையில் இருந்து வீழ்த்தப்பட்டு கொல்லப்பட்டான் என்று கூறப்படுகின்றது.

இவன் ஆயிரம் பிக்குகளுக்குத் தினந்தோறும் அன்னமிட்டான் என்றும் ஒவ்வொரு ஆண்டும் தனது முடிசூட்டு விழா நாளினை முன்னிட்டு உபசம்பதா வைபவத்தை நடத்தி வந்தான் என்றும் கூறப்படுகிறது. இவரது பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

### கலே பண்டாரவின் கதை

அக்காலத்தில் அரசிளங்குமரன் வட்டிமி (வத்திமி) என்பான் ஒருவன் அரசினை முறை தவறிக் கவர்ந்து ஆண்டான் என மக்களிடை வழங்கும் ஒரு கதை கூறுகின்றது. வட்டிமி (இவரது இயற்பெயர் 'குரஷான் செய்யது இஸ்மாயில்' என்பதாகும்) என்பவன் ஓர்அரசனுக்கும் (இரண்டாம் புவனேகபாகுவுக்கும்) முஸ்லிம் பெண்ணுக்கும் பிறந்தவன் ஆவான். இம்மக்கள் கதையில் உண்மை இருக்கலாம். இவரது ஆட்சியில் வெறுப்படைந்த சிலர், இவருக்கு எதிராக சதி செய்து, இவரை ஒரு வைபவத்துக்கு அதா கலை மலை உச்சிக்கு வரச் செய்து இவரை அங்கிருந்து கீழே தள்ளி கொலை செய்து விட்டார்கள்.

இவருடைய மரணத்தின் பின் இவரை ஒரு 'தெய்யோ' என்ற அந்தஸ்திற்கு உயர்த்தி அவரை கோவில் கட்டி சில சிங்கள மக்கள் வழிபட ஆரம்பித்தனர். இவரை சதி செய்து கொன்றவர்களுக்கு ஏதும் அழிவுகள், கெடுதிகள், ஏற்படுமென்று மக்கள் பயந்து அவரை 'கலேபண்டார தெய்யோ' என்று அழைத்து இன்றும் பக்திபூர்வமாக வழிபடுகின்றனர். (மன்னராக ஏற்க மறுத்தவர்கள் கடவுளாக வழிபட்டு



கலே பண்டார தேவாலயம்

வருவது ஆச்சரியம்தான்.) அவர் மலையிருந்து விழுந்து மரணித்த இடம் அதா கலை மலையடிவாரத்தில் 'அத்கந்த' விகாரை வளாகத்தில் அமைந்துள்ளதுடன், அந்த இடத்தில் 'கலே பண்டார தேவாலயம்' அமைந்துள்ளது. இவர் நல்லடக்கம் செய்யப்பட்ட இடம் குருணாகல் கச்சேரிக்கு அண்மையில் அமைந்துள்ளதுடன், தற்போது அதில் சிறியதொரு தக்கியாவும் அமைக்கப்பட்டு பிரசித்தமான "கல் பண்டார அவ்லியா சியாரம்' என்று தற்போது அழைக்கப்படுகிறது.

இவரது தாயாரின் அடக்கஸ்தலம் தெலியாகென்னயில் அமைந்துள்ளதுடன், அது 'ஒற்றை மீஸான் சியாரம்' என்று அழைக்கப்படுகிறது. இப்படியாக இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரேயொரு முஸ்லிம் அரசனின் அரசாட்சி இருந்துள்ளது. (வரலாறு கூறும் சிங்கள நூல்களில் இது பற்றி கூறப்படவில்லை. இது திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.)

### நான்காம்பராக்கிரமபாகு (கி.பி.1302-1326)

இரண்டாம் புவனேகபாகு மன்னருக்குப் பிறகு, அவரது மகன் நான்காம் பராக்கிரமபாகு கி.பி 1302 இல் குருநாகலை தலைநகராகக் கொண்டு ஆட்சிக்கு வந்தார். (நான்காம் பராக்கிரமபாகு, இரண்டாம் புவனேகபாகுவின் மகன் அல்லவென்றும் அவன் புகழ்பெற்ற குடும்பம் ஒன்றில் பிறந்தவன் என்றும் கூறப்படுகிறது.) இந்த மன்னன் புத்த மதத்திற்கும் கல்வியாளர்களின் வளர்ச்சிக்கும் பெரும் சேவை செய்தான். அதனால் அவன் பண்டித பராக்கிரமபாகு ராஜா என்று அழைக்கப்பட்டார்.

குருநாகல் நகரில் தலதா அரண்மனையை நிர்மாணித்தல், தலதாவின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்காக கிராமங்களை வழங்குதல், தலதா சடங்குகளை எழுதுதல், ஜாதக புத்தகத்தை சிங்களத்தில் மொழிபெயர்ப்பதற்கு அனுசரணை வழங்குதல், விடகமஞானானந்த பிரிவேனா மற்றும் தோட்டக முவ விஜயபா பிரிவேனாவுக்கு அனுசரணை வழங்குதல், கண்டியில் அஸ்கிரிசேனா சனத்தை ஆரம்பித்தல். சிங்கள போதிவங்ச, அநாகத்த வங்ச போன்ற சிங்கள நூல்களை எழுதியது இந்த மன்னனின் சேவைகளாகக் குறிப்பிடலாம். கி.பி. 1326 இல் இவனது ஆட்சி முடிந்த பிறகு, மூன்றாம் புவனேகபாகுவும் ஐந்தாவது விஜயபாகுவும் கி.பி.1341 வரை ஆட்சி செய்தனர்.

### மூன்றாம் புவனேகபாகு (கி.பி.1326-1335)

மூன்றாம் புவனேகபாகு கி.பி. 1325 அல்லது 1326 இல் ஆட்சிக்கு வந்தான். இந்த மன்னன் வன்னி புவனேகபாகு என்று அழைக்கப்பட்டான். இவர் கடந்தகால அரச பரம்பரையுடன் தொடர்பில்லாததாலும் வன்னித் தலைவனாக வாழ்க்கையைத் தொடங்கியதாலும் இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்த மன்னன் குருநாகலை தனது தலைநகராக தேர்ந்தெடுத்தான். இந்த மன்னருக்குப் பிறகு, கி.பி 1335 அல்லது 1336 இல் ஐந்தாம் விஜயபாகு ஆட்சிக்கு வந்தார்.

### ஐந்தாம் விஜயபாகு (கி.பி.1335-1341)

கி.பி 1335 அல்லது 1336 இல் அரியணை ஏறிய ஐந்தாம் விஜயபாகு மன்னர், யாழ்ப்பாண இராச்சியத்தின் சந்திரபானுவின் இரண்டாவது மகன். இந்த மன்னனும் குருநாகலைத் தன் தலைநகராகத் தேர்ந்தெடுத்து கி.பி. 1341 வரை ஆட்சி செய்தான். இந்த மன்னருக்குப் பிறகு, கி.பி. 1341 இல் அரசர் நான்காம் புவனேகபாகு அரியணை ஏறினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தர...

திருந்தும் இதுவரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் ஒன்லைனில் விண்ணப்பிக்க 5 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, விண்ணப்பதாரர்களுக்கு இம்மாதம் 06ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை ஒன்லைனில் விண்ணப்பிக்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 1911 எனும் துரித தொலைபேசி இலக்கத்திற்கோ, 011 278 4208 அல்லது 011 2784 537 அல்லது 011 278 6616 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கோ அழைப்பினை மேற்கொண்டு பெற்றுக்கொள்ள முடியுமென திணைக்களம் மேலும் கூறியுள்ளது. (ம-7)

## எரிவாயு விலை...

வுள்ள நிலையில், புதிய விலை 1393 ரூபாயாகும்.

2.3 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 63 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன் புதிய விலை 650 ரூபாயாகும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலையும் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படுகிறது.

5 கிலோகிராம் எரிவாயுவின் விலை 60 ரூபாய் அதிகரித்து அதன் புதிய விலை 1,595 ரூபாயாகும்.

12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 150 ரூபாய் அதிகரித்து அதன் புதிய விலை 3,985 ரூபாயாகும். (ம-7)

## 21 வருடங்...

சீனாவில் நடைபெற்றுவரும் 2023 ஆம் ஆண்டுக்கான ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த தருஷி கருணாரத்ன தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

இவர் குறித்த தூரத்தை ஓடி முடிக்க 2.03.20 நிமிடங்களை எடுத்துக் கொண்டார்.

21 வருடங்களின் பின்னர் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கைக்குக் கிடைத்திருக்கும் தங்கப் பதக்கம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழில் போராட்ட...

முல்லைத்தீவு நீதிபதி விவகாரத்தில் கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் மனித சங்கிலி போராட்டம் நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாண நகர் வரையில் நீளுகின்ற ஓர் மனித சங்கிலி போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது கொக்குவில் சந்தியில் போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் உள்ளிட்டோர், நீதி தேவதையின் உருவ சிலைக்கு கறுத்த துணி கட்டி , நீதி தேவதையின் கையில் உள்ள தராசு ஒரு பக்கமாக தாழ்ந்து இருக்க கூடியவாறு, நீதி தேவதையின் உருவ சிலையை காட்சிப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர்.

அதன்போது வீதியில் போக்குவரத்து ஒழுங்குகளை சீர் செய்யாது, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை புகைப்படம் மற்றும் காணொளி எடுப்பதில் போக்குவரத்து பிரிவு பொலிஸார் ஆர்வமாக ஈடுபட்டு இருந்தனர். (ம-7,33,104)

## நீதி தேவதை...

யாழ்ப்பாணத்தில் நேற்று மனித சங்கிலிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீதி தேவதையிடம் மண்டியிட்டு நீதி பதிக்கு நீதி கோரினர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நீதி கோரியும் யாழ்ப்பாணத்தில் நேற்று மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது கொக்குவில் சந்தியில் இடம்பெற்ற போராட்டத்தில் நீதி தேவதையின் உருவச் சிலைக்குக் கறுத்தத் துணி கட்டி, நீதி தேவதையின் கையில் உள்ள தராசு ஒரு பக்கமாகத் தாழ்ந்து இருக்கக் கூடியவாறு, நீதி தேவதையின் உருவச்சிலையைக் காட்சிப்படுத்திப் போராட்டத்தில் கலந்து கொண்டோர் நீதி தேவதையின் உருவச் சிலைக்கு முன் மண்டியிட்டு நீதி கோரினர். (ம-7,33,104)

## நீதிச் சேவை...

வித்துள்ளது.

நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகலுக்கான காரணங்கள் மற்றும் அதற்குப் பொறுப்பானவர்கள் தொடர்பில் ஆராய்ந்து நீதிமன்ற செயற்பாடுகளுக்கு ஏற்பட்டுள்ள தடைகளை களைவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் நீதிச் சேவை ஆணைக்குழு பிரதம நீதியரசரிடம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கோரிக்கை விடுத்துள்ளது.

கொக்குத்தொடுவாயில் மனித புதைகுழி தொடர்பிலான வழக்கு மற்றும் குருந்தூர்மலை வழக்குகளுக்கு உத்தரவுகளை பிறப்பித்திருந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா, தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் தாம் வகித்த அனைத்து நீதி சேவை பணிகளில் இருந்தும் பதவி விலகுவதாக நீதிசேவை ஆணைக்குழுவுக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்ததுடன், அவர் நாட்டைவிட்டும் வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## முல்லைத்தீவு...

புறக்கணிப்பு நடவடிக்கைகள் நேற்று மூன்றாவது நாளாக தொடர்ந்தது

நீதித் துறைக்கான சுதந்திரமும் சுயாதீன தன்மைகளும் உறுதி செய்யப்படும் வரை பணிபுறக்கணிப்பில் ஈடுபடுவோம் என முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம் மேற்கொண்டதாக முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் த. பரஞ்சோதி ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

அதற்கமைய கடந்த 2ஆம் திகதி ஆரம்பித்த காலவரையறையின்றிய தொடர் நீதிமன்றப் புறக்கணிப்பு நடவடிக்கைகள் நேற்று மூன்றாவது நாளாக தொடர்ந்து இடம் பெற்றது.(ம-7,299)

## சிறு...

நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி வழங்கக்கோரி புதன்கிழமை யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் இருந்து யாழ்ப்பாண நகர் வரை இடம்பெற்ற மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்டபின் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிபதிகளின் தீர்ப்புகள் பிழையாக இருக்கும் பட்சத்தில் அதனை மேல்நீதிமன்றத்திற்கு கொண்டு வரலாம். அதனை விடுத்து தனிப்பட்ட ரீதியாக அச்சுறுத்தல் செய்வது அது நீதித்துறைக்கும் ஆகாது. நாட்டின் வருங்காலத்தினை பாதிக்கும்.

சிறுபான்மையினரின் நீதிபதியினை இவ்வாறு அச்சுறுத்துவது சிறுபான்மையினம் சம்பந்தமான உண்மையான சரியான தீர்ப்புகளை கொடுக்க முடியாமல் போய்விடும். தம் இனம் சார்ந்த தீர்ப்புகளை வழங்கமுடியாமல் போய்விடும்.

இவ்வாறு அச்சுறுத்துவது பெரும்பான்மையினரின் அடக்குமுறையினை காட்டுகின்றது. அரசாங்கம் இதனை உரியவகையில் நிறுத்த வேண்டும் என்பதுடன் இதற்கு சரியான முறையில் தீர்ப்புக்களை வழங்க வேண்டும் என்றார். (ம-7,33,104)


தன நிதானய
திகதி - 2023.10.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1287
N 17 59 67 71 N
08549

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3499
சீட்டிழுப்பு திகதி | 04.10.2023
G 11 16 29 53
G
30411

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 566
கன்னி 15 29 45 56 கன்னி

மஹஜன சம்பத
திகதி 2023/10/04
சீட்டிழுப்பு இலக்கம் 5257
Z 9 6 6 2 8 2

மெகா பவர்
திகதி 04/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1605
U 07 67 68 72 80
35503

லக்கி 7
திகதி 04.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0083
L7 இலக்கம் 1 6
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 0 2 6 8 5 3

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2231 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.10.04 தினம் புதன்கிழமை
09 10 52 74 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,419,884.40

சனிதா
திகதி 2023.10.04 வெற்றி வாரம் 4392
04 14 16 40 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,538,076.00
07786

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3943 வர்ணம் புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2023.10.04 தினம் பச்சை
01 31 47 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,407,264/-
908059 286

கப்ருக
திகதி 04.10.2023 வெற்றி வாரம் 1407
U 33 11 26 44 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 447,821,314.20
838921 252
DLB தொலை பேசி 011-2 333 516-17 Web : www.dlb.lk

ஜயோதா
திகதி 2023.10.04 வெற்றி வாரம் 1962 வர்ணம் மஞ்சள்
05 31 39 59 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.46,374,851.20

அட கோட்டிபதி
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2057
சீட்டிழுப்பு திகதி : 2023.10.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,206,584/-
16 18 25 72 H
187423


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை - நாகபட்டினம் பரீட்சார்த்த கப்பல் சேவை நாளை

## 8 ஆம் திகதி பயணிகள் சேவை ஆரம்பமாகலாம்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கும் - சென்னை நாகப்பட்டினத்திற்கும் இடையிலான பரீட்சார்த்த பயணிகள் கப்பல் சேவை நாளை இடம்பெறவுள்ளது.

நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கி பயணிகள் கப்பல் ஒன்று நாளையதினம் வருகை தரவுள்ளது.

இதில் பயணிகள் எவரும் வருகை தரமாட்டார்கள் மாலுமி மற்றும் கப்பல் சேவையை பரிசோதிப்பவர்களே குறித்த கப்பலில் வருகை தருவர்.

கப்பல் சேவைக்கான ஒழுங்குகள் அனைத்தும் சரியாக நடைபெற்றால் அடுத்துவரும் இரு தினங்களும் பரீட்சார்த்த நடவடிக்கை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பரீட்சார்த்த நடவடிக்கை அனைத்தும் சரியான முறையில் நடைபெற்றால் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்திற்குமான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பமாகுமென தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

# கோண்டாவிலில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த காரின் கதவு திடீரென சாரதியால் திறக்கப்பட்ட நிலையில் வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மோதுண்டு விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதி கோண்டாவில் உப்புமடம் சந்திப் பகுதியில் நேற்று இரவு 9 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் தாவடியைச் சேர்ந்த 30 வயது மதிக்கத்தக்க லோகராசா தர்சன் என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தார்.

காரின் சாரதி பொலிஸில் சரணடைந்ததுடன் இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7.33.104)

## நான் கூறியது...

தால், என்னை அந்த நேரத்திலேயே கைது செய்திருக்கலாம் என பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பாக பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

2 ஆயிரம் வருடங்கள் பழைமையான எமது பௌத்த புராதனச் சின்னத்தில், பொங்கல் வைத்து வழிபட நீதிமன்றம் அனுமதி அளித்தது. அப்போது முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன், முல்லைத்தீவு நீதிபதியுடன் பேசிய காரணத்தினால், நானும் எனது கருத்துக்களை முன்வைக்க நீதிபதியிடம் அனுமதி கேட்டிருந்தேன்.

எனினும், எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது. நான் முன்னாள் இராணுவ அதிகாரி என்பதாலும், எனக்கு சட்டங்கள் தெரியும் என்பதாலும், நீதிபதியொருவர் கருத்து வெளியிட மறுத்தமையால், நானும் அமைதியாகிவிட்டேன். பாராளுமன்றிலும், குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த அனுமதியளித்தமை தவறு என்றும் இது இந்து- பௌத்த மக்களிடையே தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றுதான் கூறியிருந்தேன். இதனை நான் இன்றும் கூறுவேன். இது எப்படி அச்சுறுத்தலாகும்?

அந்த சம்பவத்திற்குப் பின்னர் நான் குறித்த நீதிபதியை சந்திக்கக்கூட இல்லை. முல்லைத்தீவு நீதிபதிக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் 5 வழக்குகள் உள்ளன.இந்த வழக்குகள் தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழு ஊடாக தனக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சட்டமா அதிபரிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இந்த நிலையில், அவரது தீர்ப்பை மாற்றுமாறு ஒருபோதும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் தற்போது தெரிவித்துள்ளது.

அப்படி அழுத்தம் பிரயோகிக்கப்பட்டிருந்தால், அவர் இதுதொடர்பாக பிடியாணையொன்றை பிறப்பித்திருக்கவும் முடியும்.

அவர் வெளிநாடு செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக, அவரது வாகனத்தை விற்பனை செய்து, வெளிநாட்டுத் தூதுவர்கள் இருவரை அவர் சந்தித்துள்ளார்.பொலிஸ் பாதுகாப்பும் அவருக்கு குறைக்கப்படவில்லை என பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அவரது மனைவியோ, இவரால் தனக்கு தொடர்ந்தும் பிரச்சினைகள் ஏற்படுத்தப்படுவதாக நீதிச்சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றையே அளித்துள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸிலும், இது தொடர்பாக அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.இதில், குறித்த நீதிபதி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் மனநல வைத்தியர்கள், இவருக்கு வைத்தியம் பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நீதிபதி கூறுவாராயின், அது யாரால் என்பதை அவர் வெளிப்படையாகக் கூறவேண்டும். ஜனாதிபதி, பொலிஸ், அமைச்சர் உள்ளிட்டோர், இந்த விடயம் தொடர்பாக விசாரணை செய்ய குழுக்களை நியமித்துள்ளனர்.

இந்தக் குழுக்கள் உடனடியாக இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை செய்து, உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று நாமும் கேட்டுக்கொள்கிறோம்" இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-7)

# க.பொ.த(சா/த) பரீட்சை பெறுபேறு சில தினங்களில்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டிற்கான க.பொ.த சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் ஒரு சில நாட்களில் வெளியாகும் என பரீட்சைத் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளன. (ம-7)

## யாழில் நேற்று...

மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாண நகர் வரையில் நீளுகின்ற போராட்டமாக இது நடைபெற்றது இந்தப் போராட்டம் மருதனார்மடம் சந்தியில் காலை 9:30 மணியளவில் ஆரம்பமானது.

சமநேரத்தில் கொக்குவில், கோண்டாவில் போன்ற பகுதிகளிலும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ்த் தேசியக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி என்பனவற்றின் ஏற்பாட்டிலும் ஆதரவுடனும் இந்த மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி என்பனவும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவை வழங்கின.

பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், சி.வி.விக்னேஸ்வரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், முன்னாள் யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி கே.சயந்தன், து.ரவிகரன், க.சர்வேஸ்வரன், பா.கஜதீபன், எஸ். சுகிர்தன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சட்டத்தரணிகள், மதத்தலைவர்கள், யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர், வர்த்தக சங்கத்தினர், பொதுமக்கள் உட்பட பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (ம-7.33.104)

VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
யாழ் - கொழும்பு
2,900/=
வடமராட்சி - கொழும்பு
2,700/=
(17019)
T.P:077 544 8503



கார் விற்பனைக்கு
தனிப்பட்ட பாவனையில் உள்ள (Mahendra kuv Nxt) CBL XXXX இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. வாங்க விரும்புவோர் நேரடியாக தொடர்பு கொள்ளவும். (17339)
076 231 8693
075 054 4020

கணக்கீடு
A/L Day Class
ஆரம்பம் : நாளை 3 P.m
[திங்கள், புதன், வெள்ளி 3 - 5 P.m]
ஆசிரியர்
S.தவா
'வார்த்தையில் அவர் வாழவைப்பதில் இவர்' (17344)
DCM யாழ் நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகில்
077 239 5858

கணக்கீடு
A/L Day Class 2P.M
A/L 2023 3P.M
A/L 2024 4P.M
A/L 2025 5P.M
(செவ்வாய், வியாழன்)
ஆசிரியர்
S.தவா
'பொய் வார்த்தை அவர்கள் பெறுபேறு இவர்' (17344)
C.C.A
சுன்னாகம்
077 239 5858

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17302)
076 825 7716 (ஆகாஸ்)

அலுவலக வேலை - பயிற்சி
2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு
*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
(C-7379)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777



CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7379)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS



இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிரவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org